விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 274 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 03 வெள்ளிக்கிழமை (19.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA (Hons)
OCTOBER INTAKE 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807

## மாமனிதர் துரைராஜாவுக்கு திருநெல்வேலியில் உருவச்சிலை

### நல்லூர் பிரதேச சபையில் தீர்மானம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் மாமனிதர் துரைராஜாவின் உருவச் சிலையினை திருநெல்வேலிச் சந்தியில்

15ஆம் பக்கம் பார்க்க

## வைத்தியர் மீது தாக்குதல்

### உரும்பிராயில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)


உரும்பிராயில் வைத்தியர் மீது தாக்குதல் நடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கோப்பாய் பொலிஸ் பிரிவிற்

15ஆம் பக்கம் பார்க்க

## இ.போ.ச - தனியார் பேருந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சிறீதரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்கங்கள் ஒன்றிணைந்து சேவையினை முன்னெடுக்க வேண்டும். இல்லையேல் அது பாரிய

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி அகழ்வுக்கான பாதீடு சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான பாதீடு நேற்று வியாழக்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் சமர்ப்பித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதை

02ஆம் பக்கம் பார்க்க


# மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துங்கள்

## இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை ஜனநாயக ரீதியில் விரைவாக நடத்துமாறு அநுர அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



### ஒக்ரோபர் 21ஆம் திகதி

## செம்மணியில் மீண்டும் அகழ்வுப் பணி?

(யாழ்ப்பாணம்)

ஒக்ரோபர் 21ஆம் திகதி செம்மணி மனிதப் புதைகுழியில் மீண்டும் அகழ்வுப் பணி ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

செம்மணி சித்துப்பாத்தி

15ஆம் பக்கம் பார்க்க

## ஒரே கையெழுத்தில் தீர்ப்பதாக கூறப்பட்ட பிரச்சினைகள் கிடப்பில்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



(அநுராதபுரம்)

'ஒரே கையெழுத்து மூலம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்போம்' என வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கத்தால், ஒரு வருடம் கடந்தும் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

அநுராதபுரம் விலச்சிய

02ஆம் பக்கம் பார்க்க

## தியாக தீபம் திலீபனின் ஆவணக் காட்சியகம்

### நல்லூரில் நாளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் வரலாற்றினை எடுத்தியம்பும் ஆவணக் காட்சியகம் நாளை சனிக்கிழமை (20) நல்லூரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

"பார்த்திபன் திலீபனாக... திலீபன் தியாக தீபமாக..." எனும் தொனிப்பொருளுடன் நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்

15ஆம் பக்கம் பார்க்க

## சங்குப்பிட்டியில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

சங்குப்பிட்டியில் இடம் பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பூநகரி சங்குப்பிட்டிப் பாலத்தடியில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞன் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் சங்குப்பிட்டிப் பாலத்தடியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது

15ஆம் பக்கம் பார்க்க

## கொழும்புத்துறை இறங்குதுறை புனரமைப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை இறங்குதுறையின் புனரமைப்புப் பணிகள் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தலைமையில் நேற்று ஆரம்பித்து

15ஆம் பக்கம் பார்க்க

## மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை

### யாழில் இளைஞன் கைது; வாளொன்றும் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து நீண்டகால

15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



அமரர்

## பொன்னுத்துரை சரவணபவன்

(ராசா - மண்டைதீவு)

திதி: அபரபக்க திரியோதசி

அன்னையின் மடியில் 26.04.1952

ஆண்டவன் அடியில் 01.10.2005

ஆண்டு இருபது இல்லை.
ஆண்டவன் அழைப்பில்
எம் வரவு வரும்வரை
உங்கள் நினைவு
எம் நெஞ்சில் நிறைவாய்
நிலைத்திருக்கும் அப்பாவே

ஓம் சாந்தி!

நின் நினைவோடு வாழும்
குடும்பத்தினர்
பொற்பதி வீதி, கொக்குவில்.

(1562)

6 ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



அமரர்

## நகுலேஸ்வரன் யோகறஞ்சினி

(சுமதி)

பிறப்பு 26.01.1967

இறப்பு 19.09.2019

ஆறு ஆண்டுகளானாலும்
ஆறாத எம் துயரம் மாறாத நினைவுடனே
வாழ்கின்றோம் உம் நினைவு அலைகளினால்
நீடூழி வாழ்வீர் என நினைவுகளில்
உற்றுநாமும் நியமதினில் வாழ்ந்திடவே
நீண்ட தூரம் சென்றதேனோ அம்மா!
வாழ்வின் உயர்வுக்காய், உதிரத்தை
ஈகையாக்கி எமை நிறைவுற வழிசமைத்தவரே
காலமதன் கட்டளையில் கைகோர்த்து
நின்றவரே, அமைதியாய், அடக்கமாய்
பணிவாய் வாழ்ந்த பெரும் பொருளே
உதிரத்தை உணவாக்கி உயிர்காத்த எம் பொருளே...

(C-3918)

" சுமதி இல்லம் "
மூத்த விநாயகர் கோவிலடி,
பொன்னம்பல வித்தியாலய வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

குடும்பத்தினர்

## செம்மணி...

குழி அகழ்வுப் பணிகள் முதல் கட்டமாக 09 நாட்களும் இரண்டாம் கட்டமாக 45 நாட்களுமாக கட்டம் கட்டமாக 54 நாட்கள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது 240 மனித என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவற்றில் 239 என்புக் கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் போது மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் நடவடிக்கைகள் மற்றும் பேராசிரியர் சோமதேவாவின் செய்மதி மூல அறிக்கை உள்ளிட்ட அறிக்கைகளின் அடிப்படையில் மனிதப் புதைகுழி காணப்படும் இடங்களுக்கு அண்மையில் மேலும் மனிதப் புதைகுழிகள் காணப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதால் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக 08 வார கால அனுமதி வேண்டும் என சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் மன்றில் விண்ணப்பம் செய்ததை அடுத்து, அதற்கான செலவீன பாதீட்டை மன்றில் சமர்ப்பிக்குமாறு மன்று உத்தரவிட்டதை அடுத்தே நேற்று பாதீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## ஒரே கையெ...

பகுதியில் நேற்று வியாழக்கிழமை (18) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் தயாராக இல்லை என்றும், எதிர்க்கட்சி இப்பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் முன்வைக்கும்போது ஒலிவாங்கிகளைத் துண்டித்து அதைத் தடுப்பதே தற்போதைய அரசாங்கத்தின் திறமையாக உள்ளதாகவும் அவர் விமர்சித்தார்.

சபை அமர்வில் நாம் மக்களின் பிரச்சினைகளை முன்வைக்கும்போது அது நிலையியற் கட்டளைகளுக்குப் புறம்பானது எனக் கூறுகின்றனர். அரசாங்கம் இவ்வாறு செயற்பட்ட போதிலும் எதிர்க்கட்சி மக்களின் பிரச்சினைகளை எவ்வாறேனும் பாராளுமன்றத்தில் முன்வைத்து பதில்களைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுத்து வருகிறது" என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

30 வருட விடுதலைப் புலிகளின் பயங்கரவாத யுத்தம் முடிந்து பல வருடங்கள் ஆகியும் விலச்சிய பகுதி மக்கள் இன்னும் தங்கள் அன்றாட வாழ்வாதாரத்திற்காகப் போராடி வருகின்றனர். யானை-மனித மோதல்கள், பயிர்ச்சேதம் மற்றும் அறுவடைக்கு நிலையான விலை இன்மை போன்ற பன்முக நெருக்கடிகளை அவர்கள் எதிர்கொள்கின்றனர் என்றார். (ம-7)

# முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் தேசிய பாடசாலை தனிநாயகம் அடிகளார் முத்தமிழ் மன்றத்தின் தமிழ் விழா இன்று (19) வெள்ளிக்கிழமை காலை 08.30 மணிக்கு பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியதாஸ் மரியசீலி தலைமையில் பாடசாலை யூபிலி அரங்கில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் குருநகர் புனித யாகப்பர் ஆலய உதவிப் பங்குத்தந்தை அருட்பணி கிறிஸ்ரி ஞானராஜா றொகான் அடிகள் வாழ்த்துரை வழங்குவார். விழாவில் "கலைத்தளிர்" சஞ்சிகையும் வெளியிடப்படும். (ந)

## கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ-து பரந்தன்

பதிவு இல pa/47 of 10-02-1971

### பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றிடமான தற்காலிக கிளைமுகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி அத்துடன் பிறப்புச்சான்றிதழ், கல்வித்தகமை சான்றிதழ் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு எதிர்வரும் 2025.10.07ம் திகதிக்கு முன்னராக தலைவர் கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் A9 வீதி பரந்தன் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

- வயதெல்லை : 18 தொடக்கம் 45 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்திற்கொள்ளப்படமாட்டாது)
- சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வேறு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் கடமையாற்றும் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
- அத்துடன் எவரேனும் ஒருவர் கூட்டுறவு சங்கத்தில் சேவையாற்றுகின்ற அதே வேளையில் நேரடியாக விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பித்துள்ளார் என அவர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னரேனும் தெரிய வருமாயின் பதவி இழப்பதற்கு அது ஒரு காரணமாக அமையும்:
- கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருப இலக்கம் 04/2017(1), 04/2018(1) ற்கு அமைய வாழ்க்கை செலவுப்படியும் விசேட செயலாற்றுகை படியும் வழங்கப்படும்.

பதவி : கிளை முகாமையாளர் (தற்காலிகம்)
(சம்பள குறியீட்டு இல - 208/14
சம்பள அளவுத்திட்டம்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இல 02/2025(1)
32900-490×10-550×10-710×10-50400
394800-5880×10-6600×10×8520×10-415800
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கசீகரிக்கப்பட்ட இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்

அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./
கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்./

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/
க.பொ.த. சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தமிழ்மொழி, கணிதம் உட்பட 06 பாடங்களுடனான சித்தி.

திரு. திருச்செல்வம் பிரபாகரன்
தலைவர்.
கரைச்சிவடக்கு ப.நோ.கூ.சங்கம்
பரந்தன்

(C-3915)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## யாழ்ப்பாணம் - வண்ணார் பண்ணை - நல்லையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான ஈஷான பாகத்தில் அமைந்துள்ள

## சிங்கார வேலவன் சிவகாயத்திரி சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதானம்

# ஏகாதச ருத்ர மஹாயாக பெரும்சாந்தி

## 20.09.2025 சனிக்கிழமை

நேசம் நிறை நெஞ்சத்தீர்!

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் அமையப்பெற்றுள்ள சிவகாயத்திரி சந்நிதானத்தில் எதிர்வரும் **20.09.2025** சனிக்கிழமை காலை **6.00** மணி முதல் சர்வலோகத்திலும் இயற்கை அனர்த்தத்தினாலும் யுத்தத்தினாலும் இறந்தவர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைவதற்கு சிவபெருமான் அனுக்கிரகிக்க வேண்டுமென்ற பிரார்த்தனையை எம்பெருமானிடம் விண்ணப்பம் செய்வதற்காக எம்பெருமானுக்கு பிரீத்தியமான ஏகாதச ருத்ர மஹாயாகம் வழமை போன்று நடாத்துவதற்கு வீரமாகாளி தாயார் அருள்புரிந்துள்ளார். அத்தருணம் அடியவர்கள் ஆசாரசீலர்களாக கலந்து கொண்டு எம்பெருமானிதும் தாயாரினதும் திருவருளை பெற்று தங்களுடைய மூதாதையர்களின் ஆத்மசாந்தியடைய பிரார்த்தனை மேற்கொண்டு தங்களை பீடித்துள்ள பிதிர் தோசங்கள் நீங்கி மண்ணில் நல்லவண்ணம் வாழ வழியேற்படுத்தி கொள்வீர்களாக.

**உற்சவ விபரம்**

விநாயகர் பூஜை காலை 6.00 மணி

கும்பபூஜை காலை 7.00 மணி

ஏகாதச ருத்ர ஜெப ஆரம்பம் காலை 7.30 மணி தொடர்ந்து

ஏகாதச ருத்ர ஹோமம், விஷேட திரவிய ஹோமம் போன்ற வழிபாடுகள் இடம்பெற்று காலை 10.00 மணிக்கு பிரதான கும்பம் வீதி பிரசன்னமாக எடுத்து வரப்பட்டு காலை 10.30 மணிக்கு ருத்ர லிங்கேஷ்வரபெருமாளுக்கு ஏகாதச ருத்ர கும்பங்கள் அபிஷேகம் செய்யப்படும்.

சிரார்த்த வழிபாடு காலை 11.00 மணி

குறித்த வழிபாட்டில் எமது நாட்டின் இறுதி யுத்தத்தில் காவு கொள்ளப்பட்டவர்களினதும் சுனாமி அனர்த்தத்தில் காவு கொள்ளப்பட்டவர்களினதும் ஆத்மா சாந்தியடைய வேண்டி பிண்டம் இட்டு, தர்ப்பணம் செய்து, நெய்தீபம் ஏற்றி வழிபாடு ஆற்றப்படும். இறுதி யுத்தத்தில் மரணமடைந்தவர்களின் உறவுகள் குறித்த வழிபாட்டில் பங்கு பற்றி சிரார்த்தம் அனுஷ்டிப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

விசேட குறிப்பு

- ஏகாதச ருத்ர ஹோம நிறைவில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த சங்கிலிய மன்னர்கள் ஈறான தமிழ் மன்னர்களுக்கும் பிண்டமிட்டு சிரார்த்தம் அனுஸ்டிக்கப்படும்.
- நாளைய தினம் நடைபெறும் சிரார்த்த வழிபாட்டில் அகால மரணம் அடைந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி சிராத்தம் அனுஷ்டிப்பது சிறப்புடையதாகும்.

**அன்னதானம் நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பமாகும்.**

குறிப்பு:- குறித்த ருத்ர ஹோம வழிபாட்டிற்கு தேவையான பால், தயிர், இளநீர், பழவகை, ஹோம திரவியங்கள்,பூமாலை,பூக்கள், ஊதுபத்தி, கற்பூரம், சாம்பிராணி, சந்தனாதித் தைலம்,பஞ்சாமிர்தப் பொருட்கள், நெய், தேன், சந்தனம் போன்ற சிவ திரவியங்களை வழங்கி தங்களது குடும்பத்தில் இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்கு வழியேற்படுத்தி பித்ருக்களின் ஆசியை பெற்று பித்ரு தோசம், பித்ருசாபம் நீங்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழியேற்படுத்தி வாழ்வீர்களாக.

19,20,21 ஆம் திகதிகளில் அடியவர்கள் காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை பிண்டம் இட்டு தர்ப்பணம் செய்து சிரார்த்த வழிபாடு செய்து கொள்ளமுடியும். குறித்த நாட்களில் சிவலிங்கேஷ்வரப்பெருமானுக்கு தங்களது கரங்களால் பால் மற்றும் இளநீரினால் அபிஷேகம் செய்து கொள்ள முடியும்.

ஏகாதச ருத்ர ஹோம உபயம்

ஸ்ரீலஸ்ரீ **சுதாநந்த சுவாமிகள்** – அக்னீஸ்வரம் தொண்டு நிறுவனம் (கனடா, கம்பர் மலை- வல்வெட்டித்துறை)

ஏகாதச ருத்ரஹோம பிரதம சிவாச்சாரியார்

கௌரவ கலாநிதி **இராஜஸ்ரீ சிவ கமல்ராஜ் குருக்கள்** முதன்மை குரு முதல்வரும் ஆதீன கர்த்தாவும்
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் சிங்கார வேலன் சிவகாயத்திரி சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானம்.

22 .09.2025 ஆம் திகதி முதல் 01.10.2025 ஆம் திகதி வரை மாலை 5.30 மணிக்கு நவராத்திரி பூஜை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்று இரவு 8.00 மணிக்கு பூஜை நிறைவடைந்ததும் இரவு உணவு தானம் வழங்கப்படும்.

ஏகாதச ருத்ரஹோம பூஜை வழிபாடுகள் காலை 6.00 மணி முதல் பக்தி தரிசனத்தில் ஒளிபரப்பப்படும்.

(C-3913)

**தொடர்புகளுக்கு-077 350 7275, 076 206 9014**

இங்ஙனம்- தேவஸ்தானம்
380/13, வீரமாகாளி அம்மன் ஆலய வளாகம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க தெளிவே என் சிந்தனை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஆசிய கிண்ணத் தொடரில் நீடிக்கிறது பாகிஸ்தான் மீண்டும் இந்தியாவுடன் பலப்பரீட்சை

**ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் பாகிஸ்தான் அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் சூப்பர் 4 சுற்றில் இந்தியாவை மீண்டும் ஒரு முறை பாகிஸ்தான் எதிர் கொள்ளவுள்ளது.**

டுபாயில் நடைபெற்று வரும் ஆசியக் கிண்ண 2025 கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் பாகிஸ் தான் அணி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை எதிர்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ் தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 146 ஓட்டங்கள் எடுத்தது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சார்பில், ஜூனைத் சித்திக் 3 விக்கெட்டுக் களையும், சிம்ரன்ஜீத் சிங் 3 விக் கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அதனைதொடர்ந்து 147 ஓட் டங்கள் என்ற இலக்கை நோக்கி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணி களமிறங்கியது.


17.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

எனவே ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை 41 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் பாகிஸ்தான் வீழ்த்தி யது.


பாகிஸ்தான் தரப்பில் ஷாஹீன் அப்ரிடி, அப்ரார் அகமது மற்றும் ஹாரிஸ் ரௌஃப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம், குரூப் ஏ பிரிவில் பாகிஸ்தான் இரண்டாவது இடத்தைப் பிடித்து, சூப்பர் 4 சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

இதன்மூலம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சூப்பர் 4 சுற்றில் இந்தியாவை மீண்டும் ஒருமுறை பாகிஸ்தான் எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (3)




## தேசிய பளுதூக்கல் போட்டியில் கோப்பாய் சரவணபவானந்த மாணவனுக்கு வெண்கலம்




அகில இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய மாணவன் சசிகரன் அபிஷன் வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றி யுள்ளார்.

அகில இலங்கை பாடசாலை களுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி பொலநறுவை றோயல் கல்லூரி உள்ளக விளை யாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் கோப்பாய் சரவணபவா னந்த வித்தியாலய மாணவன் சசி கரன் அபிஷன் 17 வயதிற்கு உட்பட்ட 102 கிலோ எடைப் பிரிவில் 141 கிலோ பளுவைத் தூக்கி வெண் கலப் பதக்கத்தை கைப்பற்றியுள் ளார். (3-90)

## 14 ஆவது முறையாக உலக சாதனை படைத்த ஆர்மண்ட் டுப்லான்டிஸ்

ஜப்பானில் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் மெய்வல்லுநர் போட்டி யில், சுவீடன் நாட்டு வீரர் ஆர்மண்ட் டுப்லான்டிஸ் கோலூன்றிப் பாய்த லில் 6.3 மீற்றர் உயரம் தாவி, 14 ஆவது முறையாக உலக சாத னையை புதுப்பித்துள்ளார்.

ஆர்மண்ட் டுப்லான்டிஸ் புதுப் பித்த உலக சாதனையின் புதிய உயரம் 6.3 மீற்றர் ஆகும். முந் தைய சாதனை குறித்து பார்த்தால், டுப்லான்டிஸ் இந்த ஆண்டின் ஆரம் பத்தில் 6.26 மீற்றர் உயரம் தாவி உலக சாதனை படைத்திருந்தார்.

சாதனைகளின் தொடர்ச்சியாக டுப்லான்டிஸ், கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் 14 முறை உலக சாதனையை முறியடித்துள்ளார். இது உலக கோலூன்றிப் பாய்தல் வரலாற்றில் மிகவும் ஆதிக்கம் செலுத்தும் வீரர்களில் ஒருவராக




அவரை நிலைநிறுத்தியுள்ளது.

இந்தச் சாதனை, கோலூன்றிப் பாய்தல் விளையாட்டில் டுப்லான்டி ஸின் ஆதிக்கத்தையும், உலக அளவில் அவரது திறமையையும் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 'படியேறுவதற்கு கூட கஷ்டப்படுகிறேன்' மனம் திறந்தார் மின்னல் வீரன் உசைன் போல்ட்

ஜமைக்கா நாட்டை சேர்ந்த முன்னாள் பிரபல ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட். 100 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனையாளரான அவர் ஒலிம்பிக்கில் 8 தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார். மேலும் 11 உலக தடகள சம்பியன் ஷிப் பட்டங்களை வென்றுள்ளார்.

உசைன் போல்ட், 100 மீற்றர் ஓட்டப்பந்தயம் மட்டுமில்லாமல் 200 மீற்றர் ஓட்டப் பந்தயம் மற்றும் 4X100 மீற்றர் ஓட்டப்பந்தயம் ஆகியவற்றில் உலக சாதனை களைப் படைத்துள்ளார்.


**உலகின் மிக வேகமான ஓட்டப்** பந்தய வீரர் என்ற பெருமையை பெற்ற உசைன் போல்ட் மின்னல் வீரன் என்று அழைக்கப்பட்டார்.

ஓட்டப்பந்தயத்தில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட உசைன் போல்டிற்கு தற்போது படிக்கட்டுகளில் ஏறுவதற்கு கூட மூச்சு வாங்குகிறது என்று வெளி யான தகவல் அவரது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள் ளது.

39 வயதான உசைன் போல்ட் செய்தித்தாள் ஒன்றுக்கு பேட்டி அளித்தார். அப்பேட்டியில், "நான் ஒரு காலத்தில் 100 மீற்றர் தூரத்தை 9.58 வினாடிகளில் ஓடினேன்.

ஆனால் இப்போது படிக்கட்டில் ஏறி னால் கூட எனக்கு மூச்சு வாங்கு கிறது. நான் உண்மையில் மீண் டும் ஓடத் தொடங்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

நான் மீண்டும் முழுமையாக உடற்பயிற்சி செய்யத் தொடங் கும்போது, மூச்சு வாங்கும் பிரச் சினை சரி ஆகும் என்று நம்பு கிறேன்" என்று தெரிவித்தார். (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்க நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்படும்

## மின்சாரசபை தொழிற்சங்கங்கள் தெரிவிப்பு


(கொழும்பு)

**பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், தற்போது முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்படும் என மின்சாரசபை தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.**

மின்சார சபையின் தன்னிச்சையான மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, கடந்த 4 ஆம் திகதி முதல் மின்சாரசபை தொழிற்சங்கங்கள் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில், தொழிற்சங்க நடவடிக்கையின் மற்றொரு கட்டமாக, சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கை நேற்று முன்தினம் ஆரம்பமானது.

அதன்படி, நேற்று இரண்டாவது நாளாகவும் சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என மின்சாரசபை தொழிற்சங்கங்கள் தெரி வித்துள்ளன.



இருப்பினும், அதிகாரிகள் தங்கள் கோரிக்கைகளை தொடர்ந்து புறக்கணித்தால், தற்போது முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கை மேலும் தீவிரப்படுத்தப்படும் என இலங்கை மின்சார சபை தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் கோசல அபேசிங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பாடசாலை நேரங்களில் கனிமப் போக்குவரத்திற்கான தடை உத்தரவில் திருத்தம்

(கொழும்பு)

பாடசாலை இடம்பெறும் நாட்களில் கனிமப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையில் திருத்தம் மேற்கொண்டுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் அறிவித்துள்ளது.

கட்டுமானத் துறையில் உள்ளவர்களின் கோரிக்கைகளை பரிசீலித்த பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலை இடம்பெறும் நாட்களில் கனிமப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு தடை விதிப்பதற்கு முன்னதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதன்படி பாடசாலை நாட்களில் காலை 6.30 மணி முதல் 7.45 மணிவரையிலும், முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரையிலும் கனிமப் போக்குவரத்து நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் கட்டுமானத் துறையினர் எதிர் நோக்கும் அசௌகரியங்களை கருத்திற்கொண்டு அதில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதன் படி, மேற்கூறிய காலங்களில் பாடசாலைகள் மற்றும் மாணவர் கடவைகளுக்கு அருகில் கனிமப் போக்குவரத்து நடவடிக்கைகள் வேக வரம்புடன் பொலிஸாரின் கடுமையான மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் எனும் புதிய விதிகளுக்கு அமைய செயற்பட முடியும் எனவும் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (நி)

# வீதிகளின் சிறு திருத்தங்களுக்கு 7 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்குட்பட்ட வீதிகளின் சிறு திருத்தங்களுக்கு 7 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி தெரிவித்தார்.

போக்குவரத்து தொடர்பான யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தி தொடர்பில் கருத்துரைக்கும் போதே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலுள்ள வீதிகளுக்கான சிறு திருத்தங்களுக்கு 7 மில்லியன் நிதி அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த நிதியில் அடையாளப்படுத்தப்பட்ட வீதிகளைத் திருத்த வீதி அபிவிருத்தி அதிகார சபை விரைந்து நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். (சு-நி)



# தொழில் திணைக்களத்தின் நடமாடும் சேவை

(கொழும்பு)

ஊழியர்களின் தீர்க்கப்படாத ஊழியர் சேமலாப நிதி மற்றும் அதனுடன் தொடர்புபட்ட பிணக்குகளுக்கு தீர்வு காண்பதற்கான நடமாடும் சேவை செயற்றிட்டம் வாரம் ஆரம்பமாகவுள்ளது.

அனைத்து மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களிலும் விசேட நடமாடும் சேவை வாரம் செப்ரெம்பர் 22 தொடக்கம் செப்ரெம்பர் 26 வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொழில் திணைக்களத்தின் தகவலின்படி இதன்போது, உறுப்பினர்களின் ஊழியர் சேமலாப நிதி உறுப்புரிமைக் கணக்குகளின் தரவுகள், நிலுவைகளைப் பரிசீலிக்கலாம். தவறான உறுப்பினர் கணக்கின் தரவுகள், தேசிய அடையாள அட்டையில் உள்ளபடியாக சரிசெய்து கொள்ளலாம். உறுப்பினர்களை பதிவு செய்து கொள்ளலாம். முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம். தொழில் சட்டங்கள் தொடர்பான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்.

இச் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக ஊழியர்கள் தேசிய அடையாள அட்டை, பி பத்திரம் (பதிவு செய்யப்பட்டிருப்பின்), தொழில் தருநரிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட கடிதம் (திருத்தங்கள் செய்துகொள்ள வேண்டியிருப்பின்) உள்ளிட்ட ஆவணங்களுடன் தொழில் திணைக்களத்தின் அலுவலகத்துக்கு வருகை தருமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# மதுபோதையில் சாரத்தியம் 38 சாரதிகள் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5,352 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவ வீரர்கள், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 790 பேரும், சந்தேகத்தின் பேரில் 27 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 277 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 156 பேரும், மது போதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 38 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 45 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4019 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# பாவனைக்கு உதவாத நிலையில் புல்லாவெளி - வெற்றிலைக்கேணி வீதி

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டிய சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட புல்லாவெளி- வெற்றிலைக் கேணி வீதி மக்கள் பாவிக்க முடியாத நிலையில் மோசமாக இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

போக்குவரத்துத் தொடர்பான யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் போக்குவரத்து, பெருந்தெருக்கள் துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பங்குபற்றிய அவர் வீதி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரியினால் யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி தொடர்பில் கருத்துரைக்கும் போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், 2016 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட புல்லாவெளி - வெற்றிலைக்கேணி வீதி பல லாயிரக்கணக்கான நிதியைக் கொண்டு புனரமைக்கப்பட்டது. ஆயினும் குறித்த வீதி தற்போது மனித பாவனைக்கு ஏற்றவாறு இல்லை. குறித்த வீதிப் புனரமைப்பில் பாரிய நிதி மோசடி இடம்பெற்றுள்ளது.

இதற்கு தாங்கள் எடுத்த நடவடிக்கை என்ன என வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த அவர், குறித்த வீதிப்புனரமைப்பு ஆவணங்கள் அனைத்தும் கணக்காய்வுக்காக குறித்த திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் அறிக்கையின் பொருட்டே மேற்குறித்து எம்மால் கருத்துக் கூறமுடியும் எனப் பதிலளிக்கப்பட்டது. (சு-நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுங்கள்!

## வவுனியாவில் பெற்றோர்கள் கவனயீர்ப்பு

(வவுனியா)

**வவுனியா வடக்கில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**




வவுனியா வடக்கு, கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனை நிவர்த்தி செய்து தருமாறு கூறி பெற்றோர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பற்றாக்குறை தொடர்பாக பலமுறை வலயக்கல்வி பணிமனை மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை இதற்கு ஒரு தீர்வினையும் பெற்று தரவில்லை. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, ஆசிரியர் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்து தருமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டம் தொடர்பாக வவுனியா வடக்கு வலயக் கல்விப்பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது விரைவில் இப் பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யப்படும் எனத் தெரிவித்தார். (8-250)

# தியாக தீபம் திலீபனின் 4 ஆம் நாள் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 4 ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-33)

# முன்பள்ளி மாணவர்களுக்கான வர்ணம் தீட்டல் போட்டிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினால் உள்ளூராட்சி வாரம் மற்றும் தேசிய வாசிப்பு மாதம் ஆகியவற்றை முன்னிட்டு நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான வர்ணம் தீட்டல் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது ஒவ்வொரு முன்பள்ளியில் இருந்தும் தலா இரண்டு மாணவர்கள் என்ற அடிப்படையில் பங்குகொள்ள முடியும் எனவும்,போட்டியின் போது நூலகத்தினரால் வழங்கப்படும் வர்ணம் தீட்டல் படம் மற்றும் வர்ணம் ஆகியவற்றை மாத்திரமே பயன்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.(8-30)

# சிவகாயத்திரி சந்நிதானத்தில்

## ஏகாதச ருத்ர மஹாயாக பெரும் சாந்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நல்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் அமையப்பெற்றுள்ள சிங்கார வேலவன் சிவகாயத்திரி சுந்தரசுவர்க்க வாயில் சந்நிதானத்தில் இன்று (19), நாளை (20) மற்றும் நாளை மறுதினம் (21) ஆகிய தினங்களில் காலை 7 மணி முதல் மாலை 6 மணிவரை ஏகாதச ருத்ர மஹாயாக பிரார்த்தனை இடம்பெறவுள்ளது.

இவ் வழிபாட்டில் இறந்த வர்களின் ஆத்மாக்கள் சாந்தியடைவதற்கு பிண்டம் இட்டு தர்ப்பணம் செய்து சிரார்த்த வழிபாடு செய்து கொள்ள முடிவதுடன் சிவலிங்கேஷ்வரப் பெருமானுக்கு தங்களது கரங்களால் பால் மற்றும் இளநீரினால் அபிஷேகம் செய்து கொள்ள முடியுமென ஆலய நிர்வகத்தினர் தெரிவித்துள்ளனர். (3)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான கப் வாகனம், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள், தண்ணீர் மோட்டர்கள், தொலைக்காட்சி பெட்டிகள் மற்றும் இதர பொருட்கள் என்பன எதிர்வரும் 2025.09.27 ஆம் திகதி காலை 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இவ் ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்பும் பொது மக்கள் பின்வரும் நிபந்தனைகளைக் கடைப்பிடித்துதவுமாறு பதிவாளர் அறிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலயத்திற்கு முன்னர் பொருட்களை பதிவாளரின் அனுமதியுடன் பொதுமக்கள் பார்வையிட முடியும். ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளித்தல் வேண்டும்.

ஏலவிற்பனையின்போது மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏலவிற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி ஏலப்பொருளினை அப்புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.(8)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய தவத்திரு சிவயோக சுவாமிகள் ஞாபகார்த்த பரிசளிப்பு விழா எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு தவத்திரு சிவயோக சுவாமிகள் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக தாபனம் மற்றும் பொது நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், கௌரவ விருந்தினர்களாக தனியார் வங்கி காப்புறுதிப் பிரிவின் வடக்கு கிழக்கு பிராந்திய முகாமையாளர் மயூரன் மற்றும் யாழ்ப்பாணம் சுமநல அபிவிருத்தித் திணைக்கள முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் த.றூபராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 120 | 200 | 180 | 150 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 150 | 170 | 200 |
| தக்காளி | 250 | 200 | 250 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 300 | 260 | 250 | 180 | 200 |
| கரட் | 300 | 350 | 300 | 280 | 400 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 | 50 |
| புடோல் | 120 | 160 | 150 | 120 | 240 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 200-350 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 150 | 140 | 250 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 600 | 400 |
| வெண்டக்காய் | 150 | 150 | 150 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 280 | 330 | 250 | 250 | 320 |
| பயற்றங்காய் | 300 | 250 | 300 | 350 | 250 |
| லீக்ஸ் | 160 | 200 | 300 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 100 | 200 | 80 | 150 |
| கறிமிளகாய் | 280 | 300 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 300 | 180 | 400 |
| போஞ்சி | 600 | 550 | 350 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | 300 | -- | 100 |
| கீரை – 1 பிடி | 100 | 50-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1000 | 600 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 280 | 160-220 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 800 | 1000 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 150 | 400 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை மரக்கறிச் சந்தைக்கு கடற்றொழில் அமைச்சர் களவிஜயம்

(கரணவாய்)

பருத்தித்துறை மரக்கறி சந்தையின் நிலவரம் தொடர்பில் ஆராய்வதற்காக கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் களவிஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

பருத்தித்துறை நகரில் காணி கொள்வனவு செய்யப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட மரக்கறி சந்தை தொடர்பில், கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் ஒரு தரப்பினர் புதிய சந்தையை பழைய இடத்திற்கு மாற்றுமாறு கோரினர்.

ஆனால் புதிய சந்தையே பொருத்தமான இடம் என கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் கருத்து தெரிவித்தனர். இதனால் சிறிது நேரம் கருத்து மோதல்கள் இடம்பெற்றது.

இந்த நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக நேற்று முன்தினம் புதன் கிழமை பிற்பகல் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் சந்தைக்கு கள விஜயம் மேற்கொண்டு மரக்கறி வியாபாரிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது புதிய சந்தை பொருத்தமான இடம் எனவும் மழை பெய்யும் போது வெள்ளம் தேங்கி நிற்பதே பிரச்சினையாக உள்ளதாகவும் அவர்கள் கூறியதைத் தொடர்ந்து வடிகால் ஏற்படுத்தி தருவதாக அமைச்சர் தெரிவித்தார். (8-60)

# கேரள கஞ்சா மீட்பு

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லாறு பகுதியில் கைவிடப்பட்ட வீடு ஒன்றில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 240 கிலோவுக்கும் அதிகமான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைவாக தருமபுரம் பொலிஸார் நேற்றையதினம் மேற்கொண்ட சோதனையின்போதே குறித்த கஞ்சா தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை, இச்சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படாத நிலையில் விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (8-316)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை | : பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் |
| விண்ணப்பதாரரின் பெயர் | : மார்க்கண்டு உலகநாதன் பெண் இராகினி |
| சபை ஆதனவரி பதிவேட்டின்படி பெயர் | : S.முத்தையா பெண் கனகம்மா |
| முகவரி | : ஆதன இல:43/1 முல்லையடி வீதி, பிரான்பற்று வட்டாரம் - 07 |

வட்டாரம் 07, முல்லையடி வீதி, ஆதன இல.43/1இல் அமைந்துள்ள ஆதனம் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில்297/22.08.2011 ஆம் இலக்க சீதன உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலி. மேற்கு பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானை கிழக்கு இறை "சங்கடவாசல்" நிலப்பரப்பு மூன்றே காலும் (நில.பர 03 1/4 ) இவ்வாதனம் என்னால் அல்லது எனது முன்னுரித்தாளரினால் எவ்விதமாகவேனும் பாரிக்கப்பட்டு அல்லது பராதீனப்பட்டும் இருக்கவில்லை என்றும் இவ் ஆதனத்தை இத்தால் சீதனம் கொடுக்க எனக்கு போதிய உரித்தும் தத்துவமும் உண்டென்றும் இதன் பேரால் வரும் எவ்வித பிசகு தடைகளையும் நான் அல்லது எனது உரித்தாளர் மரணசாதனத் தத்துவக்காரர் உரிமைத் தத்துவக்காரர் சாட்டுதல்காரரும் என்றென்றைக்கும் தற்காத்துக்கொடுப்பேன் என்றும் வெளிப்படுத்தி சீதன உறுதியை முடித்துக் கொடுக்கிறேன். இவ்வாதனம் கொள்முதலாக எனக்கு வந்தடைந்த சொந்தமும் நிந்தமும் நீண்ட கால பிசகு தடையற்ற ஆட்சியுமானது என குறிப்பிடப்பட்டு முத்தையா பெண் கனகம்மாவினால் தனது மகளாகிய இராகினிக்கும் மார்க்கண்டு உலகநாதன் ஏற்கனவே நடைபெற்ற திருமணம் காரணமாக சீதனமாகக் கொடுத்து ஆட்சியையும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் C.Surendra அவர்களால் வரையப்பட்ட 323ஆம் இலக்க 2025.05.22 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 02 குளி 15.67 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு - குமாரசாமி மனோன்மணியின் ஆதனமும்
கிழக்கு - மயூரன் ஜெயச்சித்திராவின் ஆதனமும்
மேற்கு - சந்திரசேகரம்பிள்ளை தவமணிதேவியின் ஆதனமும் கையொழுங்கை முகப்பும்
தெற்கு - தம்பையா பொன்னுச்சாமியின் ஆதனமும்


மேற்குறித்த ஆதனத்தை **மார்க்கண்டு உலகநாதன் பெண் இராகினியும்** என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத பட்சத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்** (5442)

## சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

யா/மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராக
14.09.2018-18.09.2025 வரை
கடமையாற்றி பணியிலிருந்து ஓய்வுபெற்ற

திரு.
**சிவஞானசுந்தரம் கணேசகுமார்**
(ScienceTrd, SLTS-I)



அவரது பணி நயந்து
பாராட்டி வாழ்த்துவதோடு
அவரின் ஓய்வுக்காலம் சிறக்கவும்
வாழ்த்துகின்றோம்.

**சேவைக்காலம்**

| | |
|---|---|
| நு/ஹோலி றோசரி மகா வித்தியாலம் | : 05.08.1985-29.11.1988 |
| நு/சென் மேரிஸ் தமிழ் மகா வித்தியலாயம் | : 30.11.1988-31.12.1989 |
| பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலை(பயிற்சிக்காலம்) | : 01.01.1990-01.02.1992 |
| யா/சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க பாடசாலை | : 02.02.1992-25.02.1992 |
| யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் | : 26.02.1992-03.05.1998 |
| யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் | : 04.05.1998-31.12.1999 |
| யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் | : 01.01.2000-31.12.2003 |
| யா/இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் | : 01.01.2004-01.08.2004 |
| யா/குட்டியப்புலம் அ.த.க பாடசாலை | : 02.08.2004-31.12.2007 |
| யா/தாவடி இ.த.க பாடசாலை | : 01.01.2008-11.01.2012 |
| வலயகல்வி அலுவலகம் வலிகாமம் | : 12.01.2012-04.07.2013 |
| யா/தாவடி இ.த.க பாடசாலை | : 05.07.2013-09.02.2016 |
| யா/சுதுமலை சிம்மயபாரதி வித்தியாலயம் | : 10.02.2016-13.09.2018 |
| யா/மகாஜனக் கல்லூரி | : 14.09.2018-18.09.2025 |

Best Wishes!

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.
(C-3905)

# மஹாளயம் 21.09.2025 தவறாது பிதிர்க்கடன் செய்வோம்

**தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்தான்**
**ஐம்புலத்தாறு ஒப்பல் தலை - என்றாங்கு**

திருவள்ளுவர் திருக்குறள் தென்புலத்தார் என்பது பித்ரர்கள் ஆகவும், கடவுளின் ஓர் வழிபாடு, இது ஓர் நம் சந்ததிக்கு இறையருள் எனவும் பரிமேகழகர் தென் புலம் என்பதும் ஓர் அழகிய உலகம்.

பிதிர் கடன் நாம் செய்ய வேண்டிய ஐந்து கடைமைகளில் முதன்மையானது எனத் திருக்குறள் மூலம் திருவள்ளுவர் தந்துள்ளார்.

புண்ணிய தீர்த்தங்களில் நீராடுபவர்களுடைய பாவங்களை நீக்கி, அவர்களுக்கு வீடுபேறு தருவதாகவும், தென் புலத்தாரைக் குறித்த தர்ப்பணம் முதலியவற்றைச் செய்து அவர்களைப் பிறவிக் கடனின்றும் கரையேற்றுவதாகவும் சிவபெருமான் தமது வடிவையே தீர்த்த வடிவமாக்கியுள்ளார்.

மஹாளய பட்சம் 07.09.2025 தொடக்கம் 21.09.2025 நிறைவு நாளான அன்று பிதிர்க்கடன் செய்வதுடன், நமது குல தெய்வ வழிபாடும் செய்வோம்.

குலதெய்வ வழிபாட்டுக்கு செல்ல முடியாதவர்கள் விநாயகர் அகவல், கந்தர் அநுபூதி, சிவபுராணம், அபிராமி அந்தாதி ஓதி நம்முடைய முன்னோர் வழிபாடும், குலதெய்வத்தை திருநீறு அணிந்து பிரார்த்தித்து வழிபாடு செய்வோம்.

**ஒழியாப் பிறவி எடுத்து ஏங்கி ஏங்கி உழன்ற நெஞ்சே!**
**அழியாப் பதவிக்கு அவுடதம் கேட்டி! அநாதியானை**
**மழுமான் கரத்தனை மால்விடை யானை மனத்தில் உன்னிற**
**விழியால் புனல் சிந்தி விம்மிய ' நன்மை வேண்டு' மென்றே!**
**பட்டினத்தார்- திருப்பாடல்-56**

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்க வாசகர் மடாலயத்தில் திருவாசக முற்றோதலும், வாதவூரன் ஐயாவுக்கு அபிஷேகமும், மகேசுவர பூசையும் நடைபெறும். 19.09.2025 இன்று வெள்ளிக்கிழமை கிரக தோசம், பிதிர் தோசம், பிறவிப் பிணி சகல தோசமும் நிவர்த்தியாக சிவன் அருள் பெற திருவாசகம் மடாலயத்தில் ஓதுவோம் அன்புடன்- அன்பே- சிவம்.

**நினைமின் மனனே! நினைமின் மனனே**
**சிவபெருமானைச் செம்பொனம் பலவனை**
**எனச் சிந்தித்து " ஓம் நமசிவாய" தியானிப்போம்.**



க.கு.க.சிவபாலன் (k.k.k)
போசகர் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,
மாணிக்கவாசகர் மடாலயம்.

(C-3910)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# போதைப்பொருள் நாடுகளின் பட்டியலில் இந்தியா

## - அமெரிக்கா அடாவடி -



(வோஷிங்டன்)

போதைப்பொருட்கள் கடத்தும் மற்றும் பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தான், சீனா நாடுகளுடன் இந்தியாவையும் அமெரிக்கா சேர்த்துள்ளது.

ரஷ்யாவிடம் எண்ணெய் பொருட்களை வாங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்த இந்தியாவுக்கு 50 சதவீத வரியை அமெரிக்கா விதித்தது.

மேலும், இந்தியா, சீனாவுக்கு 100 சதவீதம் வரியை விதிக்க வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அழுத்தம் கொடுத்து வருகிறார்.

இந்த நடவடிக்கைகளினால் இந்தியா - அமெரிக்கா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், போதைப்பொருட்கள் கடத்தும் மற்றும் பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தான், சீனா நாடுகளுடன் இந்தியாவையும் அமெரிக்கா சேர்த்துள்ளது.

மேலும், அமெரிக்கா மற்றும் அமெரிக்கர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் 23 நாடுகளின் பெயர் பட்டியலும் வெளியிடப்பட்டுள்ளது.

அதிலும் இந்தியாவின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. சீனா, பாகிஸ்தான், பஹாமஸ், பெலிஸ், பொலிவியா, பர்மா, கொலம்பியா, கோஸ்டாரிகா, டொமினிகன் குடியரசு, எக்குவடோர், எல் சல்வடோர், கவுதமாலா, ஹைத்தி, ஹோண்டுராஸ், ஜமைக்கா, லாவோஸ், மெக்சிகோ, நிகரகுவா, பனாமா, பெரு மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.


இதில், ஆப்கானிஸ்தான், பொலிவியா, பர்மா (மியான்மர்), கொலம்பியா மற்றும் வெனிசுலா ஆகிய ஐந்து நாடுகள் போதைப்பொருள் புழக்கத்தை தடுப்பதில் தோல்வியடைந்து விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள நாடுகள், தங்களது போதைப்பொருள் தடுப்பு முயற்சிகள் அல்லது அமெரிக்காவுடனான ஒத்துழைப்பு அளவைப் பிரதிபலிப்பதில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளது.

குறிப்பாக, இந்தியா, பாகிஸ்தான் நாடுகள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் உற்பத்தி செய்யும் நாடுகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. (நி)



# மனிதனைக் கடிக்கும் நாய்களுக்கு இந்தியாவில் ஆயுள் தண்டனையாம்



(டில்லி)

இந்தியா முழுவதும் தெருநாய் பிரச்சினை ஒரு பெரிய சிக்கலாக உருவெடுத்து இருக்கும் நிலையில் இது தொடர்பாக உத்தரப் பிரதேச அரசு ஒரு வினோதமான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அதாவது ஒரு தெருநாய் காரணமே இல்லாமல் இரு முறை மனிதர்களைக் கடித்தால் அந்த நாய்க்கு ஆயுள் முழுவதும் காப்பகத்தில் அடைக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த சில காலமாகவே இந்தியாவில் தெருநாய் பிரச்சனை மிக மோசமான ஒன்றாக மாறியிருக்கிறது.

தெருநாய் பிரச்சினையைக் கையாள உச்ச நீதிமன்றமும் கடந்த மாதம் முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்து இருந்தது.

மேலும், இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து தடுப்பூசி, கருத்தடைப் பணிகளை எல்லா மாநில அரசுகளும் தீவிரமாக மேற்கொண்டு வந்தன.

இந்த நிலையில்தான் உத்தரப் பிரதேச அரசு ஒரு வினோதமான உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

காப்பகத்தில் அடைக்கப்படும் நாய்கள் தப்பிக்க ஒரே ஒரு வழிதான் இருக்கிறதாம். யாராவது ஒருவர், அந்த நாயைத் தத்தெடுத்தால் மட்டுமே அது காப்பகத்தில் இருந்து விடுவிக்கப்படும்.

மீண்டும் நாயைத் தெருக்களில் விடமாட்டோம் என உறுதிமொழிப் பத்திரம் கொடுத்தால் மட்டுமே நாயை விடுதலை செய்வார்களாம். (நி)

# புதிய இராஜதந்திர சவாலை ஏற்படுத்தியுள்ள

## சவுதி - பாகிஸ்தானுக்கிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம்

(கட்டார்)

பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் சவுதி அரேபியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, இரு நாடுகளுக்கும் இடையே ஒரு முக்கிய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

அந்த ஒப்பந்தத்தின்படி, பாகிஸ்தான் அல்லது சவுதி அரேபியாவை யாராவது தாக்கினால், அது இரண்டு நாடுகளின் மீதான தாக்குதலாகக் கருதப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பிராந்திய அரசியலில் புதிய தாக்கங்களை ஏற்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஒப்பந்தம், இரு நாடுகளின் பாதுகாப்பையும் ஒன்றிணைத்து, பரஸ்பர பாதுகாப்பு உறுதிமொழியை வழங்குகிறது.

இதன் மூலம், ஒரு நாடு தாக்கப்படும் போது, மற்றைய நாடும் பதிலடி கொடுக்க வேண்டும் என்ற நிலை உறுதியாகிறது.

கட்டாரில் உள்ள ஹமாஸ் அலுவலகங்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்குப் பின்னர், மத்திய கிழக்கு நாடுகள் இடையே பதற்றம் நிலவி வருகிறது.

இந்தச் சூழலில் பாகிஸ்தான் பிரதமர் முதலில் கட்டாருக்கும் பின்னர் சவுதி அரேபியாவிற்கும் விஜயம் மேற்கொண்டது, பிராந்தியத்தில் பாகிஸ்தானின் அதிகரித்துவரும் செல்வாக்கைக் காட்டுகிறது.

இந்த ஒப்பந்தம், ஏனைய மத்திய கிழக்கு நாடுகளையும் இணைத்து நேட்டோ போன்ற ஒரு இராணுவக் கூட்டணியை உருவாக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இந்த ஒப்பந்தத்தின் காரணமாக, இனி பாகிஸ்தானை இந்தியா தாக்கினால், சவுதி அரேபியாவும் பதிலடி கொடுக்க நேரிடும் என்ற சூழல் உருவாகியுள்ளது. இது இந்தியாவுக்கு ஒரு புதிய இராஜதந்திர மற்றும் இராணுவ சவாலை முன்வைக்கிறது.

பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீஃப் உடன் வெளியுறவு, பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சர்கள் சவுதிக்கு விஜயம் மேற்கொண்டது, இந்த ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தையும், பாகிஸ்தான் அதற்கு அளிக்கும் முன்னுரிமையையும் வெளிப்படுத்தியுள்ளது.

இந்தப் பாதுகாப்பு ஒப்பந்தம் மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய பிராந்தியத்தில் உள்ள அதிகார சமநிலையை மாற்றி அமைக்கும் ஒரு முக்கியமான நகர்வாகக் கருதப்படுகிறது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு


# காசாவில் இஸ்ரேல் வெறியாட்டம்!

## 65 ஆயிரத்தைக் கடந்த பலி எண்ணிக்கை

## 90% மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றம்

**(ஜெருசலேம்)**

**இஸ்ரேலிய விமானப்படை மற்றும் பீரங்கிப் படை 150இற்கும் மேற்பட்ட முறை காசா நகரை தாக்கியுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.**



இஸ்ரேலின் இந்த தாக்குதல்கள் காசா நகரத்தின் பெரும் பகுதிகளை அழித்தன. சுமார் 90% மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர்.

காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கிய தரைவழி தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் மேலும் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்துகிறது.



இஸ்ரேலிய தாக்குதல்களில் நேற்று முன்தினம் மட்டும் 12 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் காசாவில் உயிரிழந்த பாலஸ்தீனியர்கள் எண்ணிக்கை 65 ஆயிரத்தை கடந்துள்ளது.

காசா சுகாதார அமைச்சகத்தின் தகவலின்படி, அக்டோபர் 7, 2023 முதல் இதுவரை 65,062 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 165,697 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த சில நாட்களில் இஸ்ரேலிய விமானப்படை மற்றும் பீரங்கிப் படை 150இற்கும் மேற்பட்ட முறை காசா நகரை தாக்கியுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல்கள், ஆயிரக்கணக்கான பாலஸ்தீன மக்கள் தஞ்சம் அடைந்துள்ள கூடார முகாம்களுக்கு அருகில் உள்ள உயரமான கட்டடங்களை தரைமட்டமாக்கியுள்ளன.

இஸ்ரேலின் இந்தத் தாக்குதல்கள் காசா நகரத்தின் பெரும் பகுதிகளை அழித்தன. சுமார் 90% மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளனர். இந்தத் தாக்குதல்களால், பல மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன.

காசா நகரில் இருந்து தென் பகுதிக்கு மக்கள் வெளியேறுவதற்காக இரண்டு நாட்களுக்கு புதிய வழித்தடம் ஒன்றை இஸ்ரேல் திறந்துள்ளது.

வாகனங்களிலும், கால் நடையாகவும் பாலஸ்தீன மக்கள் காசா நகரை விட்டு வெளியேறி வருகின்றனர்.

வான், கடல் மற்றும் நிலத்திலிருந்து நகரம் மீது கடுமையான குண்டுவீச்சுகள் நடத்தப்பட்டதாகவும், மிகப்பெரிய வெடிச்சத்தங்கள் கேட்ட வண்ணம் உள்ளதாகவும் தப்பிச் செல்லும் மக்கள் தெரிவித்தனர்.

உடல்கள் எல்லா இடங்களிலும் சிதறிக்கிடந்தன. இரண்டு வருடப் போரில் தாங்கள் எதிர்கொண்ட மிகக் கடுமையான குண்டு வீச்சுகள் இவை என்று மக்கள் விவரிக்கின்றனர்.

இதற்கிடையே காசா நகர் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களை நிறுத்துமாறு சர்வதேச சமூகம் வலியுறுத்தியுள்ளது.

கட்டார் உள்ளிட்ட நாடுகள் இஸ்ரேலின் தரைவழி தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழு, இஸ்ரேல் இனப்படுகொலையை செய்து வருவதாக தெரிவித்துள்ளது. ( நி)

## புர்ஜ் கலிபாவில் ஒளிர்ந்த மோடி படம்

(துபாய்)

இந்தியப் பிரதமர் மோடியின் பிறந்த நாளையொட்டி துபாயில் உள்ள புர்ஜ் கலிபா கட்டடத்தில் பிரதமர் மோடியின் புகைப்படம் ஒளிர்ந்தது.

பிரதமர் மோடி நேற்று முன்தினம் தனது 75ஆவது பிறந்தநாளை கொண்டாடினார்.

சிறந்த நிர்வாகியான மோடியை உலக தலைவர்கள் பாராட்டி வாழ்த்தினர்.


இந்நிலையில், பிரதமர் மோடிக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கும் விதமாக துபாயில் உள்ள உலகின் உயரமான கோபுரமான புர்ஜ் கலிபா கட்டடத்தில் மோடியின் புகைப்படம் ஒளிரும் வகையில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஆங்கிலத்தில் ஹேப்பி பர்த்டே என்ற வாசகம் இடம் பெற்றிருந்தது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாள்பட்ட சிறுநீரக நோயால் உயிரிழப்போர் அதிகரிப்பு



(கொழும்பு)

இலங்கையில் நாள்பட்ட சிறுநீரக நோயால் அன்றாடம் சுமார் 5 நபர்கள் இறக்கும் அபாயத்தில் உள்ளதாக தேசிய சிறுநீரக நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி பிரிவு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் நாட்டில் 1,600இற்கும் மேற்பட்டோர் நாள்பட்ட சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகளால் உயிரிழந்துள்ளதாகவும் பிரிவின் பணிப்பாளர் ஆலோசகர் சமூக மருத்துவர் சிந்தா குணரத்ன தெரிவித்தார்.

சிறுநீரகம் தொடர்பான நோய்கள் குறித்து சுகாதார மேம்பாட்டு பணியகம் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறுநீரக நோயின் அறிகுறிகள் பெரும்பாலும் பிற்காலத்தில் தோன்றுவதால், தொற்றா நோய்கள் உள்ள நபர்கள் வழக்கமான சிறுநீரக பரிசோதனைகளை மேற்கொள்வது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். (ரி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1993- இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி-பா-23<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16058 | பிறப்பு-1997-இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி-பா-60 3/4<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: College Teacher<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/16084 |
| பிறப்பு: 1983-இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்-AAT, Business (own)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16060 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்-அனுசம்<br>7இல் செவ்<br>கி-பா-56<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: IT(Canada)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (ONLY CANADA)<br>தொ.இ: G/16088 |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>கி-பா- 48<br>12இல்செவ்<br>உயரம்:6'1"<br>தகைமை/தொழில்:BSc,Senior Site Engineer (Australia)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16064 | பிறப்பு-2001-இந்து<br>நட்சத்திரம்:பூரட்டாதி<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில் -O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/16093 |
| பிறப்பு: 1984-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>8இல்செவ்<br>உயரம்:5"<br>தகைமை/தொழில்: O/L, Australia<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16065 | பிறப்பு-2000-இந்து<br>நட்சத்திரம்-புனர்பூசம்<br>9இல்சூரிசெவ்<br>கி.பா -36<br>உயரம்-5"6"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/16089 |
| பிறப்பு: 1991- இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி-பா-17<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்: BSc, Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/16069 | பிறப்பு - 1999 - இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>2இல் செவ்<br>கிபா- 27<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Accountant (Australia)<br>எதிர்பார்ப்பு - படித்தவர்<br>தொ.இ: G/16096 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 447

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## மேடைப்பேச்சு

நிறையப் பேருக்குக் கூட்டத்திலே பேசுவது என்றால் பயம். நமக்கு ஒன்றும் தெரியாது என்று மற்றவர்கள் நினைத்துவிடக்கூடாது என்கிற எண்ணம் தான் இதுக்குக் காரணம்.

ரொம்ப முக்கியமான ஒரு கூட்டம் என்றால் பயமும் அதிகமாக இருக்கும். முக்கியமானவர்கள் எல்லாம் வருவார்களே. அவர்கள் எல்லாம் நம்மைப்பற்றி மட்டமாக நினைத்துவிடுவார்களே என்கின்ற பயம் வந்துவிடும்.

ஆனால் மேடைப் பேச்சு என்பது அவ்வளவு கடினமான ஒரு காரியம் இல்லை என்கிறார்கள் அது சம்பந்தமான நிபுணர்கள்.

யாரும் பேச்சாளராகலாம். இது ஒன்றும் பெரிய "GIFT"இல்லை!

நீங்கள் ஒரு சிறந்த பேச்சாளராக ஆக வேண்டுமா?

அப்படி என்றால் அதுக்கு என்று சில ஆலோசனைகளைச் சொல்கிறார்கள் அனுபவசாலிகள்.

**முதலாவது ஆலோசனை:** என்னவென்றால் உங்கள் பேச்சு எளிமையாக இருக்க வேண்டும். ஏதாவது ஒரு கருத்து அல்லது இரண்டு கருத்து சொன்னால் போதும். 20 அல்லது 30 கருத்துக்களை சொல்லிக்கொண்டே போகக்கூடாது.

**இரண்டாவது ஆலோசனை:** நீங்கள் என்ன பேசப்போகிறீர்கள் என்பது முதலிலே உங்களுக்கு நன்றாகப் புரிய வேண்டும். அப்போதுதான் அடுத்தவங்களுக்குப் புரியும்.

எப்படி ஆரம்பிக்கப் போகிறோம். என்ன கருத்தை முக்கியமாக வலியுறுத்தப் போகிறோம். எப்படி முடிக்கப் போகிறோம் என்பதை முதலிலேயே நல்லா சிந்தித்து மனதிலே வைக்க வேண்டும். கடைசியாக என்ன சொல்கிறீர்களோ அதுதான் கேட்கிறவர்கள் மனதிலே நிற்கும்!

**மூன்றாவது ஆலோசனை:** உங்க பேச்சு கருக்கமா இருக்க வேண்டும். ஒரு 15 நிமிடம் பேசுவது ரொம்பப் பொருத்தம் மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருப்பது நல்லதில்லை!

**நாலாவது ஆலோசனை:** நீங்கள் பேசுவது உண்மையாக இருக்க வேண்டும். உங்களுடைய உண்மையான அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

**ஐந்தாவது ஆலோசனை:** ஆரம்பத்திலே கொஞ்சநேரம் உங்களைப் பற்றியும் எதிரிலே உள்ளவர்களைப் பற்றியும் சம்பந்தப்படுத்தி ஏதாவது பேசி ஒரு நெருக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஒவ்வொருத்தரும். இப்போது இவர் பேசப் போவது நாம் சம்பந்தப்பட்டது என்று நினைக்க ஆரம்பித்து விடுவார்கள். கேட்கத் தயாராகி விட்டார்கள் என்று அர்த்தம்.

எதிரிலே உக்காந்திருக்கின்ற கூட்டத்திலே இருந்து மூன்று பேரைத் தேர்ந்தெடுத்தார்கள்.

வலது பக்கம் ஒருவர் - நடுவிலே ஒருவர் - இடது பக்கம் ஒருவர். உங்களை கனிவாகவும் ஆர்வமாகவும் பார்க்கின்றவராக பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பேசும்போது இவங்களை நேருக்கு நேராக மாறிமாறிப் பார்த்துக் கொண்டே பேசினீர்கள் என்றால். நீங்கள் ஏதோ ஒட்டுமொத்த கூட்டத்தையும் பார்த்துப் பேசுகிற ஓர் உணர்வை அது ஏற்படுத்திவிடும்.

**ஆறாவது ஆலோசனை:** என்னவென்றால் சொற்பொழிவு என்றால் நீங்கள் பேச வேண்டும். படிக்கக்கூடாது. எழுதிப்படிக்கிறது நல்லா இருக்காது குறிப்புகள் வேண்டும் என்றால் வைத்துக் கொள்ளலாம். படிக்கிறது. பேப்பர்லேயிருந்து வருகிற மாதிரி இருக்கும். பேசுவது இதயத்துலேயிருந்து வருகிற மாதிரி இருக்கும்.

**ஏழாவது ஆலோசனை:** என்னவென்றால் மேடையிலே ஏறி நின்றவுடனே இயல்பாக மூச்சை இழுத்து விட்டுக்கொள்ளுங்கள் இயல்பு நிலைக்கு வாருங்கள். அப்புறம் இயல்பாகப் பேச ஆரம்பியுங்கள்.

இவ்வளவும் பேச்சுக்கலையில் வல்லுநர்களாக இருக்கின்றவர்கள் சொல்கின்ற ஆலோசனைகள். இதையெல்லாம் கடைப்பிடித்தால் நமக்கும் அதுக்கும் வெகுதூரம் என்று நினைத்துக் கொண்டிருந்த ஒன்று, நம் பக்கத்திலே நெருங்கி வந்துவிடும். நாம் சொல்கின்றபடியெல்லாம் அது கேட்கும்.

ஒரு பேச்சாளர். அவருக்கு சுருக்கமாகவே பேசத் தெரியாது. மேடையிலே ஏறி விட்டால் போதும். ஆரம்பித்துவிடுவார். நிறுத்தமாட்டார். பேசிக் கொண்டே இருப்பார்.

ஒரு தடவை அவர் ஒரு கூட்டத்திலே ரொம்ப நேரம் பேசிக் கொண்டே இருந்தார். எதிரிலே பொறுமை இழந்த ஒருவர் தன்னுடைய கைக்கடிகாரத்தைக் காட்டினார். அதைக் கவனித்த பேச்சாளர், "மன்னிக்க வேண்டும். கைக்கடிகாரம் கொண்டுவர மறந்துவிட்டேன். அதுதான் நேரம் போனது தெரியவில்லை!" என்றார். இதுக்கு அவர். "கடிகாரத்தைத்தான் பார்க்க முடியவில்லை. பக்கத்திலே மாட்டியிருக்கின்ற காலண்டரையாவது பார்க்கலாம் தானே?" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமை

‘பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினார் காடாள்வார்’ என ஒரு முதுமொழி வழக்கில் உண்டு. இது எமது முன்னோரின்பட்டறிவின் முடிவாகும். பொறுமை என்பது மனிதனிடம் இருக்க வேண்டிய ஒரு சிறந்த குணம். “பொறுத்திருத்தல்” என்னும் செயற்பாடு மிகக் கடினம் எனப் பலர் கருதுகின்றனர். இயற்கை சிலவேளைகளில் இச் செயற்பாட்டிற்கு எமக்குப் பயிற்சி அளிக்கும்.

நாம் வெளியே செல்ல வேண்டும் என எண்ணியிருக்கும் வேளையில் திடீரென அடை மழை பொழியும். அந்த மழை நின்ற பின்னரே வெளியே செல்லலாம். எனவே மழை நிற்கும் வரை பொறுமையோடு நாம் காத்திருக்க நேரிடுகிறது. எமது மனம் வெளியே செல்ல எண்ணினாலும் உடல் பொறுமையாக இருக்கிறது. இந்தப் பயிற்சி பொறுமைக் குணம் வளரத் துணையானது.

ஆனால் மனிதனுக்கு மனிதனின் செயற்பாட்டினால் இடர் ஏற்படும் போது இவ்வாறு பொறுமையைக் கடைப்பிடிக்க முடியுமா? இவ்வேளையில் தான் மனிதன் மிகவும் பொறுமையாக இருக்கப் பயில வேண்டும். வள்ளுவர் இப் பண்பு நிலை பற்றித் திருக்குறளிலே விளக்கமாகக் கூறியுள்ளார்.

நிலத்தை ஒருவர் ஆழமாகத் தோண்டுகிறார். தனது செயற்பாடு நிலத்திற்கு இடையூறானது என அவர் எண்ணவில்லை. ஆனால் நிலமோ அவரை அல்லற் படுத்தாது அவர் வாழ்நாள் முழுமையும் பொறுமையாகத் தாங்கிக் கொண்டிருக்கிறது. இதே மனிதன் தன்னை இகழ்ந்து பேசுபவரையும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

வாய் மொழியால் இகழப்படும் போது அதற்கு எதிராக ஏதாவது சொல்ல வேண்டும் என்ற முனைப்புத் தோன்றும். இருவரிடையே வாய்மொழி மோதல் நடக்கும். ஆனால் அதுவும் எல்லை மீறிக் கைகலப்பும் ஏற்படலாம். அந்தக் கைகலப்பு உயிரையே பறித்து விடலாம். எனவே இத்தகைய பேரிடர் ஏற்படாமல் இருக்கப் பொறுமை தான் துணை செய்யும்.

இப்பொறுமைக்குணம் பெண்களுக்கு மிகவும் இன்றியமையாதது எனக் கருதப்படுகிறது. “பொறுமை என்னும் நகை அணிந்து பெண்கள் பெருமை கொள்ளவேண்டும்” என்பர். பெண்களின் கடமைகள் பல. பெண் தன்னளவில் செயற்படுபவள் அல்ல. வீடு, சமூகம், நாடு என்ற மூன்று தளங்களிலும் தொடர்புடையவள். வீட்டில் தாயாக அவளுடைய கடமைகள் பரந்து பட்டுள்ளன. மனைக்குத் தலைவியாக “மனைவி என்ற நிலையில் அவளது பொறுப்பு தனித்துவமானது. ‘இல்லாள்’ என்ற நிலையில் இல்லத்தை நிர்வகிப்பவள்.

தாய், இல்லாள், மனைவி என்ற நிலைக்கு அப்பால் நாட்டுப் பணி செய்யத் துணை நிற்பவளும் பெண்ணே. பண்டைய தமிழிலக்கியங்கள் அவளுடைய நாட்டுப்பணியை மிக நுட்பமாகப் பாடங்களிலே பதிவு செய்துள்ளன. எனவே பெண் பொறுமையோடு பணியாற்ற வேண்டியவளாயிருந்தாள்.

இன்னும் பொறுமைக் குணத்தைப் பிறருக்குப் பயிற்ற வேண்டிய பொறுப்பும் பெண்ணைச் சார்ந்ததே. எனவே இயல்பாகவே பெண் பொறுமையாக இருக்கிறாள். பொறுமை பகைமையை ஒழிக்கும். பொறுமையின்றி. ஒருவரைத் துன்புறுத்தும் போது அதனால் ஏற்படுகின்ற இன்பம் ஒரு நாள் மட்டுமே நிலைத்திருக்கும்.

ஆனால் பொறுமையுடன் பகைமை பாராட்டாமல் பிறரைத் துன்புறுத்தாமல் செயற்படுபவர் இறக்கும் வரையும் புகழோடு வாழ்வர். பொறுமை என்னும் குணவியல்பு மனிதரைத் துன்பங்களிலிருந்து என்றுங்காக்க வல்லது.

இளையவர்களிடம் இப் பொறுமை என்னும் பண்பை இன்று காண்பது அரிதாக உள்ளது. இன்றைய தொழில் நுட்ப வளர்ச்சியும் பொறிகளின் கையாட்சியும் அவர்களை விரைவான செயற்பாடுகளுக்கே தூண்டுகின்றன.

அதனால் உடலால் செய்யும் செயற்பாடுகள் அவர்களை வெறுப்புக்குள்ளாக்குகின்றன. குறிப்பிட்ட ஒரு இடம் நடந்து செல்லக்கூடிய இடமாக இருப்பினும் நடந்து செல்வதற்கு அவர்களுக்குப் பொறுமை இல்லை. விரைவாக ஏதாவது ஊர்தியிலே செல்லவே விரும்புகின்றனர். அதனைப்பொறுமையாகச் செய்ய வேண்டிய தேவை இல்லை யென்பதே அவர்களுடைய கருத்து. ஆனால் காலால் நடந்து செல்லும் போது உடலுக்கு ஏற்படும் நன்மையை அவர்கள் உணர்வதில்லை உடல் நலம் கெட்ட பின்னரே உணர்கின்றனர். இந்த நிலை வையகமெங்கும் நிலவுகிறது.

மனித விழுமியப் பண்புகளில் ஒன்றான “பொறுமை” எனும் குணப்பண்பு பற்றிய எண்ணம் இப்போது புறந்தள்ளப்பட்டு வருகிறது. பெரியார் பொறுமை பேணத் தவறும் நிலைகளும் உண்டு. எனவே மனித வாழ்வியல் மகிழ்ச்சியாகத் தொடர வேண்டுமாயின் பொறுமை எனும் பண்பு நலன் பேணப்படுவது இன்றியமையாதது.

**வெள்ளி நற்சிந்தனை 05**



முனைவர் ச.மனோன்மணி

## யாழில்.டெங்கு பரவும் சூழல்

# வீட்டு உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நுளம்பு குடம்பிகளை பேணிய குற்றச்சாட்டில் வீட்டு உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப் பட்டுள்ளது.

இணுவில் மற்றும் தாவடி பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டு களத்தரிசிப்பு நடவடிக்கைகளின் போது நுளம்பு பெருக்கத்திற்கேதுவான சூழலில் நுளம்பு குடம்பிகள் இனங்காணப்பட்டதையடுத்து வீட்டின் உரிமையாளரிற்கு எதிராக இணுவில் பொது சுகாதார பரிசோதகரால் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் போது, வீட்டு உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டதை அடுத்து, உரிமையாளரை எச்சரித்த மன்று 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது.

மழைகாலம் தொடரவுள்ளதால் டெங்கு காய்ச்சல் வேகமாக பரவும் அபாயமுள்ளதால் அப்பகுதி மக்கள் அனைவரையும் விழிப்புடன் செயற்படுமாறும், எதிர்வரும் காலங்களிலும் இது போன்ற கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடரும் என பொது சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-33)

# இராசிபலன்

19.09.2025
புரட்டாதி 03 , வெள்ளிக்கிழமை
திரயோதசி பின்னிரவு 12.52 மணிவரை
ஆயில்யம் முற்பகல் 9.29 மணிவரை

சுப நேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்
உத்தராடம்.

வளவன்

**மேஷம்**
வழிபாடு மகத்துவம் தரும், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கடகம்**
குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**துலாம்**
முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**மகரம்**
சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணத்தின் போது விழிப்புணர்வு அவசியம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**ரிஷபம்**
உறவினர் வழியில் எதிர்பார்த்த ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**சிம்மம்**
நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாடு காரிய வெற்றி தரும், குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கலாம்.

**விருச்சிகம்**
தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்**
மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும்.

**கன்னி**
வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும், ஆதாயமும் பெறுவீர்கள், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**தனுசு**
உதாசீனப்படுத்தியவர்கள் உதவிகேட்டு வரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள் வழிபாடு ஆனந்தம் தரும்.


**மீனம்**
உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், பொது வாழ்வில் சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

எஜமானுக்கு கடன் [illegible] வேலைக்காரர்கள் திருடர்களாவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன் பாகம் - 4
காவியத் தொடர் 868





அரண்மனை வாசலில் கூடியிருந்த கூட்டத்தின் மத்தியில் கரையர் மகளைப் பார்த்ததையும், ஆருயிர் நண்பராகிய தங்களை விட்டு அவளைத் தேடிக் கொண்டு வரச் சொன்னதையும், தாங்கள் தேடிப் போய்த் திரும்பி வந்து அவள் கடலில் விழுந்து இறந்தாள் என்று தெரிவித்ததையும் கூறினார்.

அதுமுதல் அடிக்கடி அந்தக் கரையர் மகள், ஆவி வடிவத்தில் வந்து தம்மைத் துன்புறுத்துவதாகவும் சமீப காலத்தில் அவள் வருகை அதிகமாயிருப்பதாகவும் சொன்னார்"

"தேவி, அதையெல்லாம் நீங்கள் நம்பினீர்களா!"

"தந்தை கூறிய வரலாறு அவ்வளவு அதிசயமாயிருந்த படியால் என் மனமும் மிக்க குழம்பி விட்டது. இறந்து போனவளின் ஆவி வந்து தந்தையைத் தொந்தரவு படுத்துவது சித்தப்பிரமையாயிருக்கலாம் என்று நினைத்தேன். பிறகு யோசித்துப் பார்க்கப் பார்க்க வேறு சில ஐயங்கள் உண்டாயின. வானதி ஒரு நாள் இரவு, சக்கரவர்த்தியின் கூக்குரலைக் கேட்டுப் போய்ப் பார்த்தாள்.

பழுவூர் இளையராணி மாதிரி ஓர் உருவம் மன்னரின் எதிரில் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு மூர்ச்சித்து விழுந்தாள். அது முதல் அந்தக் கரையர் மகளுக்கும், இந்தப் பழுவூர் இளையராணிக்கும் ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டும் என்று தோன்றியது. வல்லவரையரும், அருள்மொழியும் கூறியதிலிருந்து அது உறுதியாயிற்று. ஐயா! நந்தினி தேவி ஒருவேளை அந்த கரையர் மகளின் புதல்வியாயிருக்க முடியுமா?"


"தங்களைப் போலவே நானும் ஊகிக்கத்தான் முடியும். தாயே! உருவ ஒற்றுமையைப் பார்த்தால் அப்படித் தான் கருத வேண்டியிருக்கிறது. ஆனால் அதிலிருந்து மட்டும் நிச்சயிக்க முடியுமா? ஒரு வேளை கரையர் மகளின் கடைசித் தங்கையாகக் கூட நந்தினிதேவி இருக்கலாம். இதையெல்லாம் பற்றி நிச்சயமாகத் தெரிந்தவர்கள் இப்போது மூன்று பேர்தான் இருக்கிறார்கள்" "அவர்கள் யார், சுவாமி!"

"ஒருவர்தான் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி. அவருடைய உள்ளத்தில் ஏதோ ஒரு இரகசியம் இருந்து வேதனை செய்து வருகிறது. ஆனால் அது இன்னதென்பதை அவராகச் சொன்னாலொழிய, நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள இயலாது. மகானாகிய கண்டராதித்தர் காலமாகும் தருவாயில் பெரிய பிராட்டி அதை அவரிடம் கூறினார் என்பது எனக்குத் தெரியும். கண்டராதித்தர் என்னிடம் சொல்லத் தொடங்கினார். இரண்டு வார்த்தை சொல்வதற்குள் அவருடைய மூச்சு நின்றுவிட்டது.." "மற்ற இருவரும் யார், ஐயா?"

"மற்ற இருவரும் பேசத் தெரியாத ஊமைகள். சேந்தன் அமுதனின் அன்னையும் பெரியன்னையுந்தான். இவர்களில் அமுதனுடைய அன்னையிடமிருந்து நாம் ஒன்றும் தெரிந்து கொள்ள இயலாது. செம்பியன் மாதேவியிடம் அவள் அளவிலாத பக்தி உள்ளவள். அந்தத் தேவி உயிரோடிருக்கும் வரையில் இவள் ஒன்றும் தெரிவிக்க மாட்டாள். ஆகையினால்தான் அவளுடைய தமக்கை மந்தாகினியை ஈழ நாட்டிலிருந்து அழைத்து வருவதற்கு நான் பெரும் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தேன்"

(தொடரும்...)

## தியாக தீபம் திலீபனின் நினைவுதினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு



(வவுனியா)

தியாகதீபம் திலீபனின் 38 ஆவது நினைவு தினம் வவுனியா மாநகரசபை வாயினில் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவு தூபியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது திலீபனின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, ஈகை சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர், வவுனியா மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன், மாநகரசபை உறுப்பினர் தர்மரத்தினம், வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் சுரேஸ், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, குறித்த பகுதியில் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை திலீபனுக்கான அஞ்சலி நிகழ்வுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் 25 ஆம் திகதி காலை முதல் ஒரு நாள் அடையாள உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (8-250)

## குறிகட்டுவான் துறைமுகத்திற்கு நவம்பர் முதல் புதிய 'பாதை'

### வீதி அபிவிருத்தி அதிகார சபை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு மக்களின் பயணத்தை இலகுபடுத்தும் முகமாக எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் பாதை (Ferry) மக்கள் பாவனைக்கு விடப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி தெரிவித்தார்.

போக்குவரத்து தொடர்பான யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று வியாழக்கிழமை போக்குவரத்து அமைச்சர் பிமல் ரட்ணாயக்க தலைமையில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலிலேயே மேற்கண்ட தகவல் பரிமாறப்பட்டது. அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், குறிகட்டுவான்துறைமுகத்தில் பொது மக்கள் பாவனைக்காக சேவையிலிருந்த பாதை பழுதடைந்த நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வாரத்தில் புதிய பாதை மக்கள் பாவனைக்கு வழங்கப்படவுள்ளது என்றும் குறித்த பாதையில் 50 பயணிகளையும் 4 வாகனங்களையும் ஏற்றிச் செல்ல முடியும் எனவும் சுட்டிக் காட்டினார். (க-நி)

## மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்கள் அழிப்பு

(சாவகச்சேரி)

பூநகரி-முழங்காவில் பகுதியில் உள்ள உணவகங்களில் பொதுசுகாதார பரிசோதகர்களின் திடீர் பரிசோதனையின் போது பெருமளவான மனித பாவனைக்கு ஊறு விளைவிக்கக்கூடிய உணவுப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஜென்சன் ரொனால்ட் தலைமையில் பொதுசுகாதார பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்ட திடீர் உணவுப் பாதுகாப்பு பரிசோதனைகளின்போது, சமைத்து கொத்துரொட்டிக்காக வெட்டப்பட்ட ரொட்டியுடன்- சமைக்காத இறைச்சியை ஒன்றாகப் பேணியமையினால் இறைச்சியின் இரத்தத்தால் மாசான நிலையில் ஆழ்குளிரூட்டியில் பேணப்பட்ட உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

மேலும் வெப்பம், கடும் புகையுடன் வேலை செய்பவர் சுவாசிக்கச் சிரமப்படுமளவு மோசமான நிலையில் காணப்படும் சமையலறை, உணவுக்கழிவுகளை வெளியில் வெளியேற்றல், மூடியற்ற குப்பைக் கூடைகளைப் பேணல், வெப்பமான உணவுகளுடன் பிளாஸ்டிக் உபகரணப் பாவனை, மருத்துவச் சான்றிதழின்றி உணவைக் கையாளுதல், தூசு, ஈயினால் உணவுப் பொருட்கள் மாசடையக்கூடிய வகையில் உணவு பரிமாறும் இடம் காணப்பட்டமை போன்ற சுகாதார குறைபாடுகளுக்காக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எதைத் தொடர்ந்து செய்கின்றோமோ, அதுவாகவே ஆகிறோம். எனவே, திறமை என்பது ஒரு செயல் அல்ல அது ஒரு பழக்கம். – அரிஸ்டோட்டில்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் தரப்புகளின் அணுகுமுறை மாற வேண்டும்

விமர்சனம் என்பது திறனாய்வு எனப் பொருள்படும். திறத்தை ஆய்வு செய்வதுதான் விமர்சனம் என்பது இப்போது புரிதற்குரியது.

இருந்தும் நம்மில் பலர் விழுந்தபாட்டில் குறிசுடுவதை விமர்சனம் எனக் கருதிச் செயற்படுகின்றனர். இத்தகைய செயற்பாடுகள் தர்மத்துக்கு ஒவ்வாதவை.

எப்போதும் நாம் செய்கின்ற காரியங்களுக்கு எதிர்விளைவு உண்டு என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடலாகாது.

அவ்வாறாயின், நாம் எதைச் செய்தாலும் அதன் நடுநிலைத் தன்மை பற்றிப் பல தடவைகள் ஆராய வேண்டும்.

இப்போதெல்லாம் முகநூல்களில் கடும் விமர்சனங்கள் ஆற்றப்படுகின்றன. இந்த விமர்சனங்களின் பயன்பாடுகள் என்ன? என்பதைப் பார்க்கும்போது, எங்கள் வருங்காலச் சந்ததிக்கு அதர்மத்தைக் கற்றுக் கொடுக்கின்றோமோ என்ற ஏக்கம் எழவே செய்கிறது.

எனவே யார் எதைச் செய்தாலும் அதற்குள் தர்மமும் நீதியும் இருக்கட்டும் என்பது மட்டுமே நம் தாழ்மையான கருத்து.

இஃது ஒருபுறமிருக்க, தமிழ் அரசியல் தரப்பினர் தங்களின் அணுகுமுறைகளை மாற்றிக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர்.

இருந்தும் அதனைச் செய்வதற்கு நம்மவர்கள் தயாரில்லை. இதுதான் எங்களின் துன்பத்துக்கான மூலகாரணம்.

உண்மை. ஒரு காலத்தில் பேரினவாத ஆட்சி யாளர்கள் நம் இனத்துக்குச் செய்த கொடுமை கள் ஏராளம்.

அன்றைய ஆட்சியாளர்களின் நிட்டூரத்தால், இன்றுவரை கண்ணீரும் கம்பலையுமாக நம் உறவுகள் அலைகின்றனர்.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை நிலைநிறுத்துவதற்காகத் தமிழின அழிப்பைச் செய்த ஆட்சியாளர்கள் இன்று நடுத்தெருவில் நிற்கின்றனர். அவர்களை நடுத்தெருவில் நிறுத்தியது சர்வதேசமோ அன்றி தமிழ் அரசியல் தரப்புகளோ அல்ல. மாறாக சிங்கள மக்கள் என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஆம், அநுர குமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக்கிய சிங்கள மக்கள் தொடர்ந்து பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் அநுர தலைமையிலான அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்தினர்.

அதன் விளைவாக முன்னாள் ஜனாதிபதிகள் மாளிகைகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களைக் கொன்று குவித்து வெற்றி விழாக் கொண்டாடிய நாயகர்கள் இப்போது மக்களால் அடித்துத் துரத்தப்படுவதை நம் கண்முன் காண்கிறோம்.

இதனை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னெடுக்கும்போது, அத்தகைய சூழ்நிலையை எமக்குச் சாதகமாக்கி தமிழ் மக்களுக்குச் சார்பாகக் குரல் கொடுக்கக்கூடிய சிங்கள மக்களை எங்களுக்கான பலம்மிக்க சக்தியாக நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும்.

இதைவிடுத்து எல்லாவற்றையும் எதிர்ப்பது என்று வெளிக்கிட்டால், சம்பந்தப்பட்டவர்கள் இருப்பதையும் இழக்க வேண்டிவரும்.

இதற்கும் மேலாக, முன்னாள் ஜனாதிபதிகள் எங்ஙனம் கேவலப்படுகிறார்களோ அதைவிட மோசமான நிலைமையையும் சந்திக்க வேண்டிவரும் கவனம்.

# வடக்குக் கிழக்கில் தொல்பொருள் சின்னங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்

## மந்திரிமனையைப் பார்வையிட்டபின் சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கில் தொல்பொருள் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்போம் எனத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடிந்து விழுந்த நல்லூர் மந்திரிமனையை தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் நேற்றுச் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்குக் கிழக்கு மக்களுடைய பூர்வீக அடையாளங்களை நிலை நிறுத்துகின்ற சங்கிலிய மன்னன் வாழ்ந்த காலத்தில் இருந்த மந்திரிமனை மழை காரணமாக ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளது.

இது மிகக் கவலையான விடயம். இந்த மந்திரிமனை என்பது தமிழர்களின் வரலாற்றுத் தொன்மையான இடம். இதனைப் புனரமைத்துப் பாதுகாக்கப்பட வேண்டிய பல முயற்சிகள் எடுத்த போதும் ஒரு சில தனி நபர்களினால் இழுபறி நிலையிலே காணப்படுகிறது.

இந்தக் கட்டடத்தை புனரமைத்து இந்தத் தொல்பொருள் அடையாளத்தை எங்களுடைய பூர்வீக அடையாளமாக நிலை நிறுத்துவதற்குரிய மிக முக்கியத்துவத்தை உணர்த்தி இருக்கின்றது.

எனவே இந்த மந்திரி மனையைப் பாதுகாப்பது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள உள்ளோம் என மேலும் தெரிவித்தார்.(ம-7,33,104)

## நிலாவரைக் கிணற்றை

# வலி.கிழக்குப் பிரதேச சபையின் பொறுப்பில் கொண்டு வரத் தீர்மானம்

யாழ்ப்பாணம் நிலாவரைக் கிணற்றை வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் பொறுப்பின் கீழ் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் அமர்வு தவிசாளர் நிரோஸ் தலைமையில் நேற்று நடைபெற்றது. நேற்றைய அமர்வில் நிலாவரைக் கிணற்றை வலி.கிழக்கு பிரதேச சபையின் பொறுப்பில் கொண்டு வருவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸிற்கும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்திக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

நீண்ட விவாதத்தினைத் தொடர்ந்து நிலாவரையில் இருந்து தொல்லியல் திணைக்களம் விலகி அதனைப் பிரதேச சபையிடம் கையளிக்க வேண்டும் எனப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அதிக வருவாயை ஈட்டும் சுற்றுலாப் பகுதியாக நிலாவரை கருதப்படுகிறது.

எனினும்குறித்த பகுதி தொல்லியல் திணைக்களத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருப்பதால் அதனை மேம்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது சுட்டிக்காட்டப்பட்டது. (ம-7)

# மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வினைத்திறனாகச் செயற்பட வேண்டும்

## யாழில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வினைத்திறன் மிக்க நிறுவனமாக இருக்க வேண்டும். சாதாரண கடை நடத்துவது போலச்செயற்படக்கூடாது.

மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும் எனப் போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

போக்குவரத்துத் தொடர்பான யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று வியாழக்கிழமை போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வெறுமனே சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் மற்றும் வாகன இலக்கத் தகடு வழங்கும் நிறுவனமாகச் செயற்படக்கூடாது.

யாழ்.மாவட்டத்திற்குட்பட்டு இயங்கும் சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளைக் கண்காணிக்கும் திட்டம் உங்களிடம் இருக்கிறதா? எனக் கேள்வி எழுப்பிய அவர், பாடசாலை சேவைகளை மேற்கொள்ளும் சாரதிகள் மேலதிக பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இவற்றைச் சிறப்பான முறையில்கொண்டு சென்றாலே விபத்துக்களைத் தடுக்க முடியும் எனச் சுட்டிக்காட்டினார். (ம-க)

## திருகோணமலை கடற்பகுதியை அண்மித்த பகுதியில் நில அதிர்வு

(திருகோணமலை)

திருகோணமலை கடற்பகுதியை அண்மித்த பகுதியில் 3.9 மெக்னிடியூட் அளவில் நிலஅதிர்வு பதிவாகியுள்ளது.

நேற்று(18) மாலை 04.06 அளவில் நில அதிர்வு பதிவாகியதாகப் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையிலிருந்து 60 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கடற்பரப்பில் நிலஅதிர்வு பதிவாகியுள்ளது.

பல்லேகெல, ஹக்மனை மற்றும் மஹகனதராவ ஆகிய நிலஅதிர்வு கண்காணிப்பு மத்திய நிலையங்களிலும் இந்த நிலஅதிர்வு பதிவாகியுள்ளதாகப் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை, தோப்பூர் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள மக்களுக்கும் நிலஅதிர்வை உணரக்கூடியதாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## ஹெரோயினுடன் குருநகரில் ஒருவர் கைது


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் ஹெரோயினுடன் 36 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநகர் பகுதியில் குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன் போது 120 மில்லி கிராம் நிறையுடைய ஹெரோயின் கைது செய்யப்பட்டவரிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

04

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1847 இல் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தினாலும் 1848 இல் உண்டான கண்டிக் கலகத்தின் காரணமாகவும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தெருக்கள் அமைக்கும் வேலையை, அன்டர்சன் மீண்டும் ஆரம்பித்து வைத்தார். அவரது காலந் தொட்டு அமைவு பெற்ற பிரதான வீதிகளாவன:

கொழும்பு-அவிசாவளை-இரத்தினபுரி-புலத்தொட்ட வீதி, காலி-பத்தேகம வீதி, கழுத்துறை-அகலவத்தை வீதி, நீர்கொழும்பு-வெயாங்கொடை வீதி, கம்பளை-கிணிகத்ஹேன-யட்டியாந்தோட்டை வீதி, நாவலப்பிட்டிய-கொத்மலை வீதி, மாவனெல்லை-அரநாயக்கா வீதி, கினிகத்ஹேன-டிக்கோயா வீதி, இரத்தினபுரி-பெல்மதுளை-ஹப்புத்தளை-பதுளை-மட்டக்களப்பு வீதி என்பன ஆகும்.

ஆள்பதி கிறெகரி, தம்புளையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் சென்ற காட்டுப்பாதைகள் போன்ற தெருக்களைப் பெரும் வீதிகளாக அமைத்தார். இந்நெடுந் தெருவிலிருந்து அநுராதபுரம்-புத்தளம், மாங்குளம்-முல்லைத்தீவு, மதவாச்சி-மன்னார் எனும் மூன்று கிளைகள் அமைக்கப்பட்டன.

இக்காலத்தில் தெருக்களின் அமைப்பு முறைகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. முதல் அமைக்கப் பெற்ற வீதிகள், துப்புரவு செய்யப்பட்ட ஒடுக்கமான காட்டுப்பாதைகள் போலிருந்தன. இவ் வீதிகள், அதிகரித்துவந்த வண்டிகளின் இரும்புச் சில்லுகளின் அதிகமான பாரத்தினால் விரைவில் பழுதடைந்துபோயின.

எனவே 1841இல் கொழும்பு-கண்டி வீதிக்குக் கல்லிடப்பட்டது. இதனால் கொழும்பு சென்று திரும்புவதற்கு எடுத்த காலம் நாற்பது நாட்களிலிருந்து எட்டு நாட்களாகக் குறைந்தது. 1850 தொடக்கம், தெருக்கள் அகலமாகவும் ஆழமாகவும் அகழ்ந்து கல்லிடப்பட்டு, அதற்கு மேல் நான்கு அங்குல உயரத்துக்கு உடைந்த கல்லிடப்பட வேண்டுமென புதுத்திட்டம் ஆக்கப்பட்டது.

1857-58 இல் நிர்மாணிக்கப் பெற்ற அரசாங்கத் தொழிற்சாலை (Government Factory), தெருக்களில் தேவையான இடங்களில் பாலங்களை அமைக்கும் வேலையைப் பொறுப்பேற்றது.

1884 இல், பொது மராமத்து இலாக்காவின் தலைமையதிகாரியான திரு. மக் பிறைட் (Macbright) என்பவர் மக்கடம் வகுத்தமுறையில் தெருக்களை அமைக்கும் முறையினை இலங்கையில் ஆரம்பித்து வைத்தார். இப்புது முறையின் உபயோகத்தினால் தெருக்களைப் பழுதுபார்க்கும் வேலையின் செலவு குறிப்பிட்டளவு குறைந்தது.

1891 இல், தெருக்களின் மேற்பரப்பை உறுதியாக அமைப்பதற்குப் பத்துத் தொன் நிறையுடைய உறுளைகள் (Rollers) பாவனைக்கு வந்தன.

#### போக்குவரத்துச் சாதனங்கள்

இருபதாம் நூற்றண்டின் ஆரம்பத்துடன் போக்குவரத்துச் சாதனங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. முதல் மோட்டார் வாகனம் 1902 இல் பெப்ரவரியில் இலங்கையில் வந்திறங்கியது. முதலாவது உலகப்போரின் முடிவில் 2000 கார்கள் தீவின் வீதிகளில் காணப்பட்டன. 1939 இல் பதிவு செய்யப்பட்ட கார்களின் எண்ணிக்கை 31,164 ஆயிற்று. வாகனங்களின் பெருக்கத்துக்கு ஏற்றதாகப் பெற்றோல் இறக்குமதியும் துரிதமாக அதிகரித்தது. இறக்குமதி, 1923 இல் 20 இலட்சம் கலனிலிருந்து 1939 இல் 120 இலட்சமாக அதிகரித்தது.

1910 தொடக்கம் பஸ் வண்டிகளும் லொறிகளும், ஆட்களையும் பொருள்களையும் ஏற்றவும் இறக்கவும் உபயோகிக்க ஆரம்பித்தன.

முதல் பஸ்சேவை கொழும்புக்கும் சிலாபத்துக்குமிடையே தொடங்கியது. பஸ்களின் எண்ணிக்கை 1922 இல் 217, 1925 இல் 1444, 1929 இல் 2694 ஆக அதிகரித்தன.

பஸ் சேவைகளின் பல அம்சங்களையும் கட்டுப்படுத்தச் சட்டங்கள் 1927 முதல் படிப்படியாக இயற்றப்பட்டன. பஸ்கள் ஒ-டும் பாதைகள், நேர அட்டவணைகள். அதி குறைந்த கட்டணங்கள், சேவையாளர் 'வேதனங்கள்' எனும் விடயங்கள் பற்றி சட்டங்கள் படிப்படியாக இயற்றப்பட்டன.

#### இலங்கைப் புகையிரதச் சேவை:

உலகத்திலே முதன் முதலாக இங்கிலாந்திலேதான் புகையிரத சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த நாட்டிலேதான் புகையிரதங்களில் உபயோகிக்கும் நீராவி எந்திரத்தை ஜோர்ஜ் ஸ்ரீபன்சன் முதலில் கண்டுபிடித்தார்.

1829 இல் இவர் மணித்தியாலம் 30 மைல் ஓடக்கூடிய "றொக்கட்" என்ற பெயர் பெற்ற இரதத்தை அமைத்து அதன் செயற்றிறனை நிரூபித்தார். அடுத்த ஆண்டு லிவர்ப்பூல்-மன்சஸ்டர் புகையிரத வீதி போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இங்கிலாந்தில் "புகையிரதப் பைத்தியம்" உண்டாயிற்று. அங்கு தனிப்பட்ட கம்பனிகள் நிறுவப்பட்டு, புதுவீதிகளை அமைத்து நடாத்தி இலாபத்தைப் பெற்றன."

ஆரம்பத்தில் இங்கிலாந்தில் புகையிரத வீதிகளை அமைக்கும் வேலையை அரசாங்கம் தனியார் முயற்சியிலேயே விட்டது. இரயில்வே கம்பனிகள், காளான்கள் போல நாட்டின் சகல பாகங்களிலும் முளைத்தன. பணம் வைத்திருந்தவர்கள், இரயில்வே கம்பனிகளில் தமது பணத்தைத் துணிந்து முதலீடு செய்ய முன்வந்தனர். அக் கம்பனிகள் தான் பிறநாடுகளில் புகையிரத வீதிகளை அமைப்பதற்கும், பல உதவிகளைச் செய்வதற்கும் காரணங்களாயின.

புகையிரதக் கம்பனிகளுக்கிடையே போட்டியும், பிணக்கும் ஏற்பட்டதனால், பிரித்தானிய முதலாளிகள் தம் மூலதனத்தைக் கீழ்நாடுகளில் முதலீடு செய்யலாமென எண்ணினர். தூரத்தில் கிடந்த இலங்கைத்தீவு அவர்களது கூர்மையான கண்களுக்கு மிகவும் வாய்ப்பான இடமாகத்தென்பட்டது.

1842 இல் இலங்கைக்கு ஒரு புகையிரத வீதியை அமைக்கும் திட்டம் முதன் முதலாகப் பரிசீலனை செய்யப்பட்டது. ஆனால் அதனைப்பற்றி இலங்கை வாழ்மக்கள் ஒன்றுமே அறியாதவர்களாயிருந்தமையால், அவர்கள் அதில் எவ்வித அக்கறையும் கொள்ளவில்லை. அவர்களது முக்கியமான தேவைகளை மாட்டுவண்டிகள் ஈடுசெய்தன.

1850 தொடக்கம் மலைநாடெங்கும் கோப்பித் தோட்டங்கள் சீக்கிரமாக விருத்தியடைந்து வந்தன. 300 தோட்டங்களின் விளை பொருள்களை கொழும்புக்கு அனுப்புவதற்குப் போதிய வண்டிகளும் எருதுகளும் இருக்கமாட்டாவென்ற அச்சம் தோன்றவே, துரைமார்களும் வியாபாரிகளும் புகையிரத சேவையின் இன்றியமையாமையை உணரத் தொடங்கினர்.

தமது தேவைகளைப் பூர்த்தி செய்யவல்ல சாதனம் புகையிரதம் ஒன்று மாத்திரமே என நன்குணர்ந்த அவர்கள், தெருக்களின் விஸ்தரிப்பில் திருப்தியடைய மறுத்தனர். வெகு விரைவில் புகையிரத சேவை அமைக்கப்பட வேண்டுமென வாதாட ஆரம்பித்தனர்.

கொழும்பிலிருந்து கண்டிக்கு ஒரு புகையிரத வீதியை அமைப்பதற்கென இங்கிலாந்தில் நிறுவப்பட்ட, "இலங்கைப் புகையிரதக் கம்பெனி" (The Ceylon Railway Company) அளவைகளையும், திட்டங்களையும், செலவுகளையும் கணக்கிட்டு, 1857 இல் அரசாங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் எழுதியது.

1858 ஆகஸ்ட் 3 ஆம் நாள், புகையிரத சேவையின் ஆரம்ப விழாவை உவாட், மிகவும் ஆடம்பரத்துடன் நடாத்தினர்.

இதன் பின்பு வேலை ஆரம்பித்தபொழுது கணக்கிடப்பட்ட செலவுத் தொகை £ 80,000 மிகவும் குறைந்த தொகையென கம்பெனியார் உணர்ந்தனர். இந் நிலையில் சட்டசபையின் குழுவொன்று நிலையைப் பரிசீலனை செய்து, அவ்வொப்பந்தத்தை இரத்துச் செய்யுமாறு சிபார்சு செய்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாமனிதர்...

நிறுவுவதற்கு நல்லூர் பிரதேச சபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் மாமனிதர் பேராசிரியர் துரைராஜாவிற்கு சிலை ஒன்றினை அமைப்பதற்கு இடமொன்றினை ஒதுக்குவது தொடர்பில் நேற்று வியாழக்கிழமை நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தவிசாளர் ப. மயூரனால் அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் திருநெல்வேலிச் சந்தியில் நல்லூர் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் அல்லது யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு முன்னால்உள்ள நடைபாதைக்கு அருகில் இச்சிலையினை நிறுவுவதற்கான இடமாகத் தெரிவு செய்யலாம் எனத் தெரிவித்தார்.

அதன்போது திருநெல்வேலிச் சந்தியில் நல்லூர்ப் பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் மாமனிதர் துரைராஜா அவர்களின் சிலையினை நிறுவுவதற்கான பொருத்தமான இடமென சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. (ம-7,33,104)

## சங்குப்பிட்டியில்...

டிப்பர் வாகனம் மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரி மற்றும் பூநகரிப் பொலிஸார் முன்னெடுத்து வரும் நிலையில் இளைஞனுடைய சடலம் மரண விசாரணைகளுக்காகப் பூநகரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,30)

## மாணவர்களை...

மாகப் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இளைஞன் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இளைஞனின் வீட்டைப் பொலிஸார் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியபோது, 20 போதை மாத்திரைகள், 12 கிராம் 370 மில்லிக்கிராம் ஐஸ் போதைப் பொருளும் 61 கிராம் கஞ்சாப் போதைப் பொருளையும் கூரிய வாளொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இளைஞனைக் கைது செய்த பொலிஸார் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33)

## இ.போ.ச...

பிரச்சினையைத் தோற்றுவிக்கும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

போக்குவரத்துத் தொடர்பான யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.பஸ் தரிப்பிடப் பிரச்சினை பாரிய பிரச்சினையாக உள்ளது. யாழ். நகரின் அழகும் தனித்துவமும் பேணப்பட வேண்டுமெனின், நெருக்கடி குறைக்கப்பட வேண்டும். விபத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும். யாழ். பஸ்தரிப்பிடம் இடமாற்றப்பட வேண்டும் என புத்திஜீவிகளின் கருத்தை மேற்கோள் காட்டியுள்ள அவர்,

தனியார் பஸ் உரிமையாளர்கள் இவ்விடயத்தில் ஒத்துழைக்கும்போது அரச போக்குவரத்துச் சபை வெளியே செல்ல முடியாது என்பது ஏற்புடையதல்ல எனச்சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த போக்குவரத்து அமைச்சர், நகர அபிவித்தி அதிகார சபையினர், யாழ்.பிரதேச செயலர், பொலிஸ் அதிகாரி ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

இதில் தூர இடங்களுக்குரிய அரச, தனியார் பேருந்துகள் ஓர் இடத்திலும், சிறுதூரப் பேருந்துகள் சிற்றுந்துகள் ஓர் இடத்திலும் தரித்து சேவையில் ஈடுபடுவது தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வாகும் என்ற நகர அபிவிருத்தி அதிகார சபையினரின் கருத்தை ஏற்றுக்கொண்டார். (ம-க)

## கொழும்புத்துறை...

வைக்கப்பட்டது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் 140 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறித்த இறங்குதுறை புனரமைக்கப்படவுள்ளது. (ம-7)

## செம்மணியில்...

மனிதப் புதைகுழி வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் அடுத்த அகழ்வுக்கான பாதீட்டை மன்றில் சமர்ப்பித்தார். பாதீட்டை ஏற்றுக் கொண்ட நீதிமன்று வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி முன்னேற்ற நடவடிக்கையை அவதானிப்பதற்காக அறிக்கையைப் பெற்றுக் கொள்ளத் தவணையிட்டுள்ளது.

ஒக்ரோபர் முதலாம் திகதி பாதீடு நிறைவேற்றப்படுமாக இருந்தால் ஒக்ரோபர் 21ஆம் திகதி அடுத்த கட்ட அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்படும் என சட்டத்தரணி நிறைஞ்சன் தெரிவித்தார். (ம-7,33)

## தியாக...

றலில் நாளை சனிக்கிழமை (20) மாலை 6.30 மணியளவில் மாவீரர் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டுக் குழு கேட்டுக் கொண்டுள்ளது. (ம-7,33)

## வைத்...

குட்பட்ட உரும்பிராய் பகுதியில் வீதியால் வைத்தியர் ஒருவர் சென்றுகொண்டிருந்தார்.

இதன்போது மதுபோதையில் இருந்த ஒரு குழுவினர் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வீதியில் நின்றனர்.

இதன்போது குறித்த வைத்தியர் தான் செல்வதற்கு வழிவிடுமாறு கூறியவேளை அவர் மீது அங்கிருந்த கும்பல் தாக்குதல் நடத்தியது.

தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த வைத்தியர் இதுகுறித்து கோப்பாய் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினார்.

இதன்போது அங்கு வந்த கோப்பாய் பொலிஸார் இருவரைக் கைது செய்த நிலையில் ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர். (ம-7,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.09.18
சீட்டிழுப்பு இலக்கம் 5956
G 6 0 0 1 5 9
அத சம்பத
G 0 1 5 9
சீட்டிழுப்பு இலக்கம் 0531
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.09.18
சீட்டிழுப்பு இலக்கம் 0072
விருச்சிகம் 11 33 35 53

தன நிதானய
திகதி - 2025.09.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1986
H 09 17 77 82 H
Double Chance

மெகா பவர்
திகதி 18/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2304
P 24 09 17 40 74

ஜய
திகதி 2025.09.18
சீட்டிழுப்பு இலக்கம் 0224
B 4 5 8 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4198
சீட்டிழுப்பு திகதி 18.09.2025
Y 02 03 49 79
Y

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.18
சீட்டிழுப்பு இலக்கம் 1265
விருச்சிகம் 01 36 49 61 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
18.09.2025 வெற்றி வாரம் 0664
Y 2 7 5 6 5 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,519,188.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2930
சீட்டிழுப்பு திகதி 2025.09.18 தினம் வியாழக்கிழமை
36 46 75 77 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,686,148.80

சனிதா
திகதி 18.09.2025 வெற்றி வாரம் 5091
21 52 53 65 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,320,402.80
ரூ. 50,000/-

சசிரி
வெற்றி வாரம் 0772
சீட்டிழுப்பு திகதி 18.09.2025
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 22 25 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4642
சீட்டிழுப்பு திகதி 18.09.2025 தினம் வியாழக்கிழமை
01 12 15 47
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,872,624.80

லக்ன வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 12 08 22 32 34
2106
18.09.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.594,748,582.40

அட கோடிபதி
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2756
சீட்டிழுப்பு திகதி: 2025.09.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,096,256.80
16 46 59 76 O
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண...

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ்ஜா நேற்று முன்தினம் புதன்கிழமை (17) பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இந்த சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, பாராளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, ஹர்ஷண ராஜ கருணா, தயாசிறி ஜயசேகர மற்றும் நளின் பண்டார ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போதே இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ்ஜா மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசிடம் வலியுறுத்தியதாக சுட்டிக்காட்டினார். அத்தோடு இலங்கையின் சமகால அரசியல் நிலைவரங்கள் மற்றும் உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் இந்திய அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் இதன் போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உயர்ஸ்தானிகருக்குமிடையிலான இந்தச் சந்திப்பின் போது பரந்தளவிலானதும் பன்முக அடிப்படையிலானதுமான இலங்கை - இந்திய உறவுகள் மற்றும் நாட்டின் அபிவிருத்திப் பணிகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7)


## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் நல்லூர்ப் பகுதியில் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- நல்லூர் குறுக்கு வீதி முகப்புடன் யாழ். மாநகர சபை முன் வீதி
- நல்லூர் ஆலயத்தில் இருந்து 500m தூரம்
- பருத்தித்துறை வீதி 150m, செட்டித்தெரு 50m
- நாவலர் வீதி 150m, கச்சேரி நல்லூர் வீதி 100m
- இரண்டு பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 3 கோடி (மூன்று கோடி)
- நல்ல சுற்றுச்சூழல்
- அனைத்து ஆவணங்களும் சரியாக உள்ளன.

(5446)

தொடர்புகளுக்கு :

**077 468 3354, 077 288 0152**
**076 860 2770**
**Golden Real Estate (Pvt) Ltd**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். கோப்பாய் இராசபாதை வீதியில் ரெஜினிங் கொலிஜ்க்கு முன்பாக 14 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரித்து 20 அடிப் பாதையுடன் விற்பனைக்கு உண்டு குடியிருப்புச் சூழல், நல்ல நீர்க்கிணறு, செம்மண் தரைக் காணி.

பார்வையிடும் நேரம் :- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

(5454)

பிரதான போக்குவரத்துச் சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக

தொடர்புகளுக்கு : விமல்

**076 755 8606, 077 638 5683**

## வேலைவாய்ப்பு

**உதவியாளர்கள் :**
பொருட்களை விநியோகம் செய்யும் வாகனத்திற்கு உதவியாளர்/ பண வசூலிப்பாளர் தேவை. (25 – 45) வயதிற்கு உட்பட்ட)

**கணக்காளர் :**
களஞ்சிய இருப்புக்கள்/ கணக்குகள் சரி பார்க்க கணனி அறிவுள்ளவர்கள் தேவை. (45 வயதிற்கு மேற்பட்ட)

தொடர்புகளுக்கு : 076 328 0381
தங்களின் விபரங்களை (Whatsapp 070 799 9515) இல் அனுப்பி வைக்கவும்

(5450)

## வேலைக்கு ஆள் தேவை

யாழ்ப்பாணம் கீரிமலையில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டில் பூந்தோட்டப் பராமரிப்பும் வீடு மேற்பார்வைக்கும் ஆள் தேவை

3 நேர உணவும் தகுந்த சம்பளமும் தங்குமிட வசதியும் தரப்படும் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**076 873 9479**

(5449)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் 30,000/- 50,000/-

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

(C-3916)

**V2 TRAVELS** 076 1410725, 076 8226236
v2vacancies@gmail.com

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Accounts | : 0777131485 |
| Group Leader | : 0704733000 |
| Waiter | : 0774078235 |
| Office boy | : 0771587186 |
| Technical Officer | : 0773580547 |
| Carpenter | : 0769158453 |
| பேக்கரி வேலை | : 0759576429 |
| Cook | : 0740695110 |
| Painter | : 0772387041 |
| Office Admin | : 0772155933 |
| Café Assistant | : 0766587149 |
| Dental Surgical Assistant | : 0777111831 |
| Sales Assistant | : 0773565155 |
| Financial Planner | : 0776530029 |
| Waiter | : 0775527937 |
| Sales Girls / Social media promoter | : 0764449377 |

வேலைவாய்ப்பு வட்சப் குரூப்பில் இணைய மற்றும் மேலதிக யாழ் வேலைவாய்ப்புகளுக்கு :

**dewmasweb.com**

வேலையாட்கள் தேவையா?

**076 098 4532**

(5455)

**DEWMAS, 51, Amman Road, Nallur**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் k.k.s வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.

(5329)

**076 663 3199**

## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகத்தில் பணிபுரிவதற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

(5452)

01) தச்சுத் தொழிலாளர்கள் - (Skill)
02) பயிற்றப்படாத தொழிலாளர்கள் - (UN Skill)

நேர்முகத் தேர்வு : 20.09.2025 - 23.09.2025 (காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை)

இடம் : 758, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல. : **077 048 14 89**

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2660/- |
| 21-27 Kg | 2480/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3916)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241, 076 822 6237

## வெளிநாட்டில் வசிக்கும் மணமகளிற்கு மணமகன் தேவை

1993 இல் பிறந்த கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு உள்நாட்டில்/ வெளிநாட்டில் வசிக்கும் மணமகன் தேவை.

(5457)

**077 335 3461**

## உடனடி வேலைவாய்ப்பு

வெளிநாட்டு பொதிகள் சேவை நிறுவனத்திற்கு O/L அல்லது A/L படித்த பெண் பணியாளர்கள் தேவை. மன்னார் மற்றும் யாழ்ப்பாண கிளைகளுக்கு.....

(5456)

**077 755 45 28**
**077 413 45 28**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.